# தமிழ்த்தேன்

84

UNIVERSITY LIBRARY
3 1 MAY 1957
MADRAS

நாமக்கல் கவிஞர்

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

UNIVERSITY EXTENSION
16 DEC 1957
MADURAI

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

முதற் பதிப்பு: டிசம்பர் 1953.
இரண்டாம் பதிப்பு: மே 1956.
உரிமை பதிவு செய்யப்பெற்றது.

Ramalingam pillai

விலை ரூ. 2–0–0

632
031:1M88x
J61

செங்குந்தமித்திரன் அச்சகம் சென்னை-1

## நாமக்கல் கவிஞர்

### எழுதிய நூல்கள்

திருக்குறள் புது உரை
திருவள்ளுவரும் பரிமேலழகரும்
திருவள்ளுவர் திடுக்கிடுவார்
வள்ளுவரின் உள்ளம்
தேசபக்தர் மூவர்
கீர்த்தனங்கள்
தமிழ் மொழியும் தமிழரசும்
தமிழன் இதயம்
சங்கொலி
கவிஞன் குரல்
இசைத் தமிழ்
அவளும் அவனும்
காந்தி அஞ்சலி
என் கதை
மலைக் கள்ளன்
காந்தீய அரசியல்

# பதிப்புரை

❋

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நாமக்கல் கவிஞர் அவர்கள் நேரடியாக ஈடுபட்டுச் சிறை சென்றதோடு, அப்போர் வீரர்களுக்கு உணர்ச்சி யூட்டக்கூடிய எண்ணற்ற கவிதைகளையும் இயற்றித் தந்த போர்க்களப் புலவர் ஆவார்.

அரசியல்—சமூக—பொருளாதாரத் துறைகளிலே அவர் காந்தீய நெறியைக் கடைப்பிடித்து வரும் காந்தீயக் கவிஞர்.

அவர் எந்தக் கருத்தையும் காந்தீயக் கண் கொண்டுதான் நோக்குகிறார். இந்நூலில் அடங்கி யுள்ள கவிதைகளிலெல்லாம் காந்தீய அடிப்படை யில் தமிழ் மணம் கமழ்கிறது.

நீண்ட நாட்களுக்குப் பிறகு வெளிவரும் நாமக்கல் கவிஞர் அவர்களின் புதிய கவிதைத் தொகுப்பாகிய "தமிழ்த்தேனை" தமிழ் மக்கள் ஆவலோடு விரும் பிப் பருகுவார்கள் என்பதில் ஐயமில்லை. இந்நூலை வெளியிடும் நல்வாய்ப்பளித்த நாமக்கல் கவிஞர் அவர் களுக்கு எங்கள் வணக்கமும் நன்றியும் உரியதாகும்.

சோம. சுவாமிநாதன்

5—12—53.

இன்ப நிலையம்.

# பொருளடக்கம்


| கவிதைத் தலைப்பு | கவிதையின் முதல் வரி | பக்கம் |
|---|---|---|
| **தமிழ்** | | |
| தமிழ் | தமிழென்று தருகின்ற | 11 |
| தமிழ் வளர்க்கச் சபதம் செய்வோம் | சீர் சிறந்த தமிழர்களின் | 14 |
| அமிழ்தத் தமிழ் மொழி | அமிழ்தம் எங்கள் தமிழ் மொழி | 17 |
| தமிழ் வழி அரசு | தமிழ் மொழி வளர்த்த ஞானம் | 20 |
| தமிழ் மக்கள் | நிலைபெற்ற அறிவென்ற | 22 |
| **இலக்கியம்** | | |
| திருக்குறள் பெருமை | அமிழ்தமென்று மிகமகிழ்ந்து | 23 |
| கம்பன் திருநாள் | கம்பன் திருநாள் கொண்டாடி | 25 |
| பகவத் கீதையின் சிறப்பு | பகவத் கீதையைப் படித்திடுவோம் | 28 |
| அனைத்தும் நீயே | ஆற்றல்கள் அனைத்தும் நீயே | 30 |
| **பெரியோர்கள்** | | |
| இயேசு கிறிஸ்து | தூய ஞான தேவன் | 33 |
| ஸ்ரீ ரமண ரிஷி | சித்தர்களும் முத்தர்களும் | 34 |
| ராஜாஜி | கூறிய அறிவால் கொண்ட | 36 |
| வல்லபாய் பட்டேல் | இல்லாத காந்தி மகான் | 38 |
| வாழ்க முதலியார் | சலியாத சேவையும் | 40 |
| பாரதிக்கு வெற்றிமாலை | சுப்ரமண்ய பாரதிக்கு | 41 |
| காந்தி சரித்திர நொண்டிச் சிந்து | காந்தியின் சரிதம் | 42 |
| **அரசியல்** | | |
| சுதந்திரதேவி | சுதந்திர தேவியை | 53 |
| நம் சுதந்திரம் | சுதந்திரம் அடைந்தோம் | 54 |
| சுதந்திரச் சபதம் | அன்னியர்கள் நமை ஆண்ட | 56 |
| காந்தி தந்த குடியரசு | எண்ணரிய தியாகிகளை | 57 |
| கற்பகச் செடி | சுதந்திரம் தருகிற | 59 |
| தேசீய வாரம் | தேசீய வாரத்தை | 60 |
| 'ஜேய் ஹிந்த்' | 'ஜேய் ஹிந்த்' என்கின்ற | 61 |
| இலங்கை சுதந்திர கீதம் | வீரகேசரி என்ன நின்று | 63 |

# தமிழ்

தமிழென்று தருகின்ற தனியந்தப் பெயரில்
அமிழ்தென்று வருகின்ற அதுவந்து சேரும்
நமதிந்தப் பெயர்கொண்ட மொழியென்ற எண்ணம்
தமிழர்க்குப் புகழ் மிக்கத் தருமென்றல் திண்ணம்

பயிருக்கு நீர் என்ற பயன் மிக்க வழியே
உயிருக்கு வெகு நல்ல உணர்வுள்ள மொழியே
துயருற்ற மனதிற்குத் துணைநின்று உதவும்
அயர்வற்ற ஞானத்தை அடைவிக்கும் அதுவே

அன்பென்ற அதைமிக்க அறிவிக்க நின்று
துன்பங்கள் தருகின்ற துயரத்தை வென்று
இன்பத்தின் நிலை சொல்ல இணையற்ற வழியாம்
தெம்புள்ள தமிழென்று திகழ்கின்ற மொழியாய்

அருளென்று உலகத்தின் அறிவாள ரெல்லாம்
பொருள் கொள்ளும் பொருள்தன்னைப் புரிவிக்கும்
[சொல்லாம்

இருள் கொண்ட உள்ளத்தில் இயல்பான பழியை
தெருள் கொள்ள ஒளிதந்து திகழ்கின்ற மொழியே

அறிவென்று பெயர் கொண்ட அதை மட்டும் நாடும்
குறிகொண்டு உலகெங்கும் குறைவின்றித் தேடும்
வெறிகொண்ட இனம் என்று வெகுபேர்கள் போற்றும்
நெறிகொண்ட தமிழ் மக்கள் நிறைகண்ட மாற்றம்

கலையென்ற கடலுக்குக் கரைகண்ட புணையாம்
நிலை கொண்ட அறிவுக்கு நிகரற்ற துணையாம்
அலைபட்ட மனதிற்கு அமைதிக்கு வழியாம்
மலையுச்சி ஒளியன்ன மறைவற்ற மொழியாம்

அறமன்றிச் செயலொன்றும் அறியாத மொழியாம்
மறமென்ற செயல் என்றும் மதியாத மொழியாம்
நிறமென்று மதமென்று நிந்தித்தல் அறியா
திறமுள்ள தமிழென்று திசைமெச்சும் நெறியாம்

குணமென்ற அதைமட்டும் கும்பிட்டு நாளும்
பணமென்ற பலமென்ற பயமின்றி வாழும்
இணையற்ற உறுதிக்கு இசைமிக்க வழியாம்
மணமிக்க தமிழென்ற மதிமிக்க மொழியாம்

பலகாலம் பலநாடும் பரிவோடு சுற்றி
உலகோரின் பலசொல்லை உறவோடு கற்று
விலகாத நட்பிற்கு வெகுகெட்டி வேராம்
தலையாய அறிவிற்குத் தமிழென்று பேராம்

எந்தெந்த நாட்டின்கண் எது நல்ல தென்று
அந்தந்த மொழிதந்த அறிவின்கண் நின்று
முந்துள்ள இவையென்ற முறையுள்ள எல்லாம்
தந்துள்ள தொகை போலும் தமிழென்ற சொல்லாம்

விரிகின்ற அறிவோடு விரிகின்ற நிலையால்
திரிகின்ற உலகத்தைத் தெரிகின்ற கலையால்
சரியென்ப தொன்றன்றிப் பிறிதொன்றில் சலியா
பெருமைத்து தமிழென்ற பெயர்தந்த ஒலியாம்

சீலத்தை இதுவென்று தெரிவிக்கும் நூலாம்
காலத்தைத் தூரத்தைக் கருதாது மேலாம்
ஞாலத்தை அண்டத்தை நாமாக எண்ணும்
மூலத்தின் உணர்வெங்கள் மொழிஉண்டு பண்ணும்

பிறநாடு பிறர்சொத்து பிறர் சொந்த எதையும்
உற நாடிச் சதி செய்தல் உன்னுத மதியும்
இரவாமல் எவருக்கும் ஈகின்ற நயனும்
அறமோதும் தமிழ்கற்று அடைகின்ற பயனும்

விஞ்ஞானம் அதனோடும் விளையாடி நிற்கும்
மெய்ஞ்ஞானம் அதைமட்டும் மிகநாடிக் கற்கும்
பொய்ஞ்ஞானம் வாதித்துப் புனிதத்தை இகழும்
அஞ்ஞானம் இல்லாமை அதுபெற்ற புகழாம்

கொல்லாமை பொய்யாமை எனுமிவ் விரண்டில்
எல்லாநல் அறமுற்றும் இடைநிற்றல் கண்டு
சொல்லாலும் செயலாலும் மனதாலும் தொழுதோர்
நல்லோர்கள் பணிதந்த தமிழ்வாழ்க நாளும்.

# தமிழ் வளர்க்கச் சபதம் செய்வோம்

சீர்சிறந்த தமிழர்களின் புத்தாண் டிந்தச்
சித்திரையில் தொடங்குகிற திறத்தால் இன்று
பார்புரந்த மனுநீதிச் சோழன் பண்டோர்
பசுவினுக்குச் சமதர்மம் பரிவாய்ச் செய்து
ஏர்சிறந்த ஒருமகனை ஈடாய்த் தந்து
இணையறியாப் பெரும்புகழைத் தமிழுக் கீந்த
தேர்சிறந்த தியாகேசன் திருவா ரூரில்
திகழுமிந்தச் சபைதனிலோர் சபதம் செய்வோம்!

அமிழ்தமென எவ்வுயிர்க்கும் அன்பே செய்து
அருள் நெறியைப் புகட்டுவதே அறமாய்க்கொண்ட
தமிழ் மொழியின் பெருங்குணத்தின் தாராளத்தைத்
தடுக்கவரும் துடுக்குகளைத் தவிர்க்க வேண்டும்.
நமதருமை முன்னோர்கள் நெடு நாளாக
நடத்திவந்த நன்னெறியை நலியப் பேசி
அமைதிமிக்க தமிழ்வாழ்வைக் குலைக்க எண்ணும்
அநியாயம் முழுவதையும் அகற்ற வேண்டும்.

பாண்டியரும் சோழர்களும் சேரமன்னர்
பாடுபட்டுப் பயிர்செய்த நாகரீகம்
நீண்டுயர்ந்து கோபுரங்கள் வடிவாய் நின்று
நிரந்தரமாம் பரம்பொருளின் நினைவு கூட்டித்
தூண்டியநல் லுணர்ச்சிகளின் தொகுப்பே யன்றோ
தொன்றுதொட்டு இன்றளவும் தொடரும் நூல்கள்?
ஈண்டிவைகள் யாவினையும் இகழ்வோ மானால்
என்னமிச்சம் தமிழ்வளர்ச்சி இனியும் உண்டோ?

கோயில்களின் பெரும்பயனைக் குறைத்துப் பேசிக்
கும்பிடுவோர் நம்புவதைக் குலைத்தும் ஏசித்
தூயவழி வாழ்வதற்கு நல்லோர் கண்ட
துறவுமனப் பொறையறிவைத் தோஷம் சொல்லி
வாயில்வந்த கொச்சைகளால் வசைகள் வீசி
வகுப்புகளில் வெறுப்புகளே வளரச் செய்யும்
ஞாயமற்ற பேச்சுகளை நீக்கா விட்டால்
நம்முடைய தமிழ் வாழ்வு நாசமாகும்.

முன்னோர்கள் யாவரையும் மூடரென்றும்
மூவேந்தர் பரம்பரையும் அமைச்சர் முற்றும்
சொன்னவர்கள் சூழ்ச்சிகளைச் செய்தா ரன்றிச்
சொந்தபுத்தி இல்லாத வீணர் என்றும்
பொன்னாலும் புகழாலும் மயக்க வொண்ணுப்
புலவர்களின் இலக்கியங்கள் பொய்க ளென்றும்
என்னேரம் பார்த்தாலும் இகழ்வே யானல்
எப்படிநம் தமிழ்மொழிக்கு வளர்ச்சி ஏறும்?

ஏனென்று கேட்பதற்கோ எவரும் இன்றி
எழில்மிகுந்த தமிழ்வாழ்வை இகழ்ந்துபேசிக்
கோனென்ற யாவரினும் குணமே மிக்க
மூவேந்தர் நெறிமுறைக்கும் குற்றம் கூறும்
நானென்ற அகங்காரம் நம்மைச் சூழ
நல்லதமிழ் வளர்ச்சியினி நமக்கும் உண்டோ?
தேனென்ற நமதுமொழி வாழ வேண்டின்
தீவிரமாய் இந்நிலையைத் தீர்க்கவேண்டும்.

நித்தியமாம் சத்தியமே நெறியாய்க் கொண்டு
நெற்றிக்கண் ஈசனுக்கும் குற்றம் காட்டும்
சுத்தமுள்ள பெரும்புலவர் வழியில் தோன்றிச்
சுகபோக ஆசைகளைத் துறந்து வாழ்ந்த

எத்தனையோ பெரியவர்கள் இசைத்த நூல்கள்
ஏளனத்தால் இழிவடைய விட்டோம் இன்று
அத்தனையும் அழிந்தொழிய விடுவோ மானல்
அதன்பிறகு தமிழ்வளர்ச்சி ஆசை என்னும் ?
புதுமையென்றும் புரட்சியென்றும் புனைந்துகூறிப்
புவியறிந்த உண்மைகளைப் பொருள்செய்யாமல்
முதுமொழிகள் யாவையுமே மோசம் செய்யும்
மூடபக்தி யாகுமென முரண்டு சொல்லிச்
சதிபுரியத் துணிந்துவிட்டோம், தமிழ்த்தாய் நொந்து
தவிக்கின்ருள் ; தான்வளர்த்த தருமம் எல்லாம்
கதியிழந்து போகுமெனக்கண்ணீர் கொட்டிக்
கதறுகின்ருள் அவள்பெருமை காப்போம் வாரீர் !
விஞ்ஞானக் கலைகளெல்லாம் விரிந்திட் டாலும்
வேறெவர்க்கும் அழிவுசெய்ய விரும்பிடாத
மெய்ஞ்ஞானக் கருணைவழி காக்கும் மேன்மை
மிகப்படைத்த தமிழ்மனசை மிகவும் தூற்றி
அஞ்ஞானப் பொய்களையே அடுக்கிக் கொண்டு
அருந்தமிழின் பெருவாழ்வை அழிக்க எண்ணும்
பொய்ஞ்ஞானத் தீமைகளைப் போக்க வேண்டும்
புத்தாண்டு சபதமிதைப் புனைவோம் இன்று.
தெள்ளியநல் அறங்களையே தெளிவாய்ச் சொல்லித்
தினையளவும் பிசகாமல் நடந்து காட்ட
வள்ளுவனே மறுபடியும் வந்தான் என்ன
வழிகாட்டித் திருக்குறளை வாழ்ந்த வள்ளல்
பிள்ளைமனப் பேரறிஞன் பெம்மான் காந்தி
பெருநெறியே தமிழ்த்தாயின் பேச்சா மென்று
கள்ளமற நாமறிந்து கொள்வோ மானல்
காத்திடலாம் தமிழ்மொழியை ; வளர்ச்சி காணும்.

# அமிழ்தத் தமிழ் மொழி

அமிழ்தம் எங்கள் தமிழ்மொழி
அன்னை வாழ்க வாழ்கவே.

வையகத்தில் இணையிலாத
வாழ்வுகண்ட தமிழ்மொழி
வானகத்தை நானிலத்தில்
வரவழைக்கும் தமிழ்மொழி
பொய் அகந்தை புன்மையாவும்
போக்கவல்ல தமிழ்மொழி
புண்ணியத்தை இடைவிடாமல்
எண்ணவைக்கும் தமிழ்மொழி

மெய்வகுத்த வழியிலன்றி
மேவும்எந்தச் செல்வமும்
வேண்டிடாத தூயவாழ்வைத்
தூண்டுகின்ற தமிழ்மொழி
தெய்வசக்தி என்ற ஒன்றைத்
தேடித்தேடி ஆய்ந்தவர்
தெளிவுகண்ட ஞானவான்கள்
சேகரித்த நன்மொழி

உலகிலுள்ள மனிதர்யாரும்
ஒருகுடும்பம் என்னவே
ஒன்றுபட்டு வாழும்மார்க்கம்
தொன்றுதொட்டுச் சொன்னது
கலகமற்று உதவிமிக்க
சமுகவாழ்வு கண்டது
கடமைகற்று உடைமைபெற்ற
கர்மஞானம் கொண்டது

சலுகையோடு பிறமொழிக்கும்
சரிசமானம் தருவது
சகலதேச மக்களோடும்
சரசமாடி வருவது
இலகும்எந்த வேற்றுமைக்கும்
ஈசன்ஒன்று என்பதை
இடைவிடாமல் காட்டும் எங்கள்
இனிமையான தமிழ்மொழி

கொலைமறுக்கும் வீரதீரக்
கொள்கைசொல்லும் பொன்மொழி
கொடியவர்க்கும் நன்மைசெய்யக்
கூறுகின்ற இன்மொழி
அலைமிகுந்த வறுமைவந்து
அவதியுற்ற நாளிலும்
ஐயமிட்டு உண்ணுகின்ற
அறிவுசொல்லும் தமிழ்மொழி

கலைமிகுந்த இன்பவாழ்வின்
களிமிகுந்த பொழுதிலும்
கருணைசெய்தல் விட்டிடாத
கல்விநல்கும் மொழியிது
நிலைதளர்ந்து மதிமயங்க
நேருகின்ற போதெலாம்
நீதிசொல்லி நல்லொழுக்கம்
பாதுகாக்கும் தமிழ்மொழி

அன்புசெய்து, அருள்அறிந்து,
ஆற்றல்பெற்ற அறமொழி
அறிவறிந்து திறமையுற்று
அமைதிமிக்கத் திருமொழி

இன்பமென்ற உலகறிந்த
யாவுமுள்ள கலைமொழி
இறைவனோடு தொடர்பருமல்
என்றுமுள்ள தென்றமிழ்
துன்பமுற்ற யாவருக்கும்
துணையிருக்கும் தாயவள்
துடிதுடித்து எவ்வுயிர்க்கும்
நலமளிக்கும் தூயவள்
தெம்புதந்து தெளிவுசொல்லும்
தெய்வமெங்கள் தமிழ்மொழி
திசைகளெட்டும் வாழ்த்துகின்ற
இசைபரப்பச் செய்குவோம்

பழிவளர்க்கும் கோபதாப
க்ரோதமற்ற பான்மையும்
பகைவளர்க்கும் ஏகபோக
ஆசையற்ற மேன்மையும்
அழிவுசெய்யக் கருவிசெய்யும்
ஆர்வமற்ற எண்ணமும்
அனைவருக்கும் நன்மைகாணும்
வித்தைதேடும் திண்ணமும்
மொழிவளர்ச்சி யாக்குமென்ற
உண்மைகண்டு முந்தையோர்
முறைதெரிந்து சேர்த்ததிந்த
நிறைமிகுந்த முதுமொழி
வழியறிந்து நாமும்அந்த
வகைபுரிந்து போற்றுவோம்
வஞ்சமிக்க உலகவாழ்வைக்
கொஞ்சமேனும் மாற்றுவோம்.

# தமிழ் வழி அரசு

தமிழ்மொழி வளர்த்த ஞானம்
தரணியில் பரவி எங்கும்
தமிழ்வழி அரசுநீதி
தழைத்திட முடியுமானல்
குமிழ்தர உலகைவாட்டும்
கொடுமைகள் குறையும், உண்மை,
அமிழ்தினை உண்டா லென்ன
அனைவரும் சுகித்து வாழ்வோம்

சிலம்பினைக் காட்டிக் கேட்ட
கண்ணகி சீற்றம் கண்டு
குலம்பழி கொண்டதென்று
குமுறிய துயரால் நொந்து
நலம்பிழைத் தறத்தைக் கொன்ற
நாணத்தால் உயிரை விட்ட
தலம்புகழ் மன்னன்காதை
தமிழுக்கே சொந்தமாகும்

கன்றினை மைந்தன் கொல்லக்
கதறின பசுவைப் பார்த்து
'இன்றுனக் குற்ற துன்பம்
எனக்குறச் செய்வேன்' என்று
தன்மகன் உயிரைக் கன்றின்
உயிருக்கு ஈடாய்த் தந்து
வென்றிகொள் நீதி மன்னன்
வேறெந்த மொழியில் உண்டு?

கொண்டவன் அயலூர்போகக்
குலமகள் தனித்த வீட்டை
அண்டினர் கதவைத் தட்டில்
கரத்தினை அறுப்போம் என்று
விண்டதை மறந்துசெய்த
குற்றத்தால் விதித்தவாறே
தண்டனை தனக்கேதந்த
மன்னனும் தமிழனாகும்

திடமிகும் தெய்வபக்தன்
தீவிர தேசபக்தன்
கடமையும் தீரவீரக்
கருணைசேர் கட்டப்பொம்மன்
'அடிமையாய் வாழமாட்டேன்
அன்னியர்க் கஞ்சேன்' என்று
கொடுமையை எதிர்த்துநின்ற
கொள்கையும் தமிழின் கூற்றும்.

உள்ளமும் உடலும்கூம்ப
உலகெலாம் வணங்கும்ஜோதி
வள்ளலக் காந்திசெய்த
அறந்தரு வாழ்க்கைமுற்றும்
தள்ளரும் அறங்களாகத்
தமிழ்த்திருக் குறளில் முன்பே
வள்ளுவன் வாழ்ந்துசொன்ன
கொலைதவிர் வாய்மையாகும்.

# தமிழ் மக்கள்

நிலைபெற்ற அறிவென்ற
நிதிமிக்க நல்கும்
நிறைவுற்ற அருள்கொண்ட
நிகரற்ற தெய்வம்

கலைமிக்க தமிழன்னை
கழல்கொண்டு பாடிக்
கனிவுற்ற மனமொத்த
களிகொண்டு கூடி

அலையற்ற கடலென்ன
அமைவுற்று நாளும்
அகிலத்தின் பலமக்கள்
அனைவர்க்கும் உறவாய்த்

தலைபெற்ற புகழ்கொண்டு
தவமிக்க ராகித்
தயவொன்றிப் பயமின்றித்
தமிழ்மக்கள் வாழ்வோம்
தமிழ்மக்கள் வாழ்வோம்.

# திருக்குறள் பெருமை

அமிழ்தமென்று மிகமகிழ்ந்து
அறிஞர் யாரும் போற்றிட
அறிவறிந்த மொழிஇதென்று
அகிலமெங்கும் ஏற்றிடும்
தமிழ் மொழிக்கு அழிவிலாத
தன்மைசூட்டி வைத்ததும்
தரணியெங்கும் இணையிலாத
இல்லறத்தை நத்திடும்

அமைதிமிக்க ஜனசமூகம்
தமிழரென்ற கீர்த்தியும்
அடிமையற்ற குடிமைபெற்ற
அரசுகண்ட நேர்த்தியும்
இமையவர்க்கும் நெறிபுகட்டும்
எங்கள்தெய்வ வள்ளுவன்
இங்குரைத்த குறள்களென்ப
ஈந்த நன்மை அல்லவோ

காடுசென்று குகையடைந்து
கண்கள்மூடி எண்ணியும்
காவிகட்டி ஓடெடுத்துக்
கஷ்டவாழ்க்கை பண்ணியும்
தாடிவைத்து மொட்டைதட்டித்
தவசியென்ற பேருடன்
தரணிமெச்ச ஊர்கள்சுற்றித்
தருமபோதம் கூறியும்

கூடுவிட்டுக் கூடுபாயும்
சித்து செய்யக் கோரியும்
கோடிகாலம் வாழ எண்ணி
காயகற்பம் தேரியும்
தேடுகின்ற உண்மையாவும்
ஓடிவந்து நிற்குமே
தெய்வவாக்கு வள்ளுவன்
திருக்குறள்கள் கற்கவே

அன்புதந்து அருள்விளக்கி
அறிவுசொல்லும் அறமொழி
ஆன்ம ஞானம் என்று சொல்லும்
அதையும்சேரப் பெருவழி
துன்ப மென்ற உலகவாழ்வில்
துயரம் ஏதும் வந்திடில்
துணைபுரிந்து அருகிருந்து
தோது சொல்லும் மந்திரி

இன்பம்என்று தவறுசெய்து
நோய்கள்சேரக் கண்டதும்
இடைபுகுந்து மாற்றுரைத்து
இடரைநீக்கும் பண்டிதம்
தெம்புமிக்கத் தூயவாழ்வின்
தெளிவு காட்டும் பண்பதாம்
தெய்வஞான வள்ளுவன்
திருக்குறள்கள் என்பவாம்.

# கம்பன் திருநாள்

கம்பன் திருநாள் கொண்டாடிக்
கவிதா தேவியின் அருள்கூடி
அன்பின் வாழ்க்கையைக் கடைப்பிடிப்போம்
அனைவரும் இன்புறும் படிநடப்போம்

கற்றவர்க் கெல்லாம் பொதுவாகும்
கம்பன் திருநாள் இதுவாகும்
மற்றுள பற்பல நாட்டாரும்
மதித்துளம் மகிழ்ந்திடும் பாட்டாகும்

தமிழ்மொழி தனக்கொரு தவச்சிறப்பை
தந்தது கம்பனின் கவிச்சிறப்பே
'அமிழ்தம் தமிழ்மொழி' என்பதுவும்
அழியா திருப்பதும் கம்பனதாம்

கம்பனை மறந்தால் தமிழ் ஏது?
கவிதை என்பதும் கமழாது
அம்புவிக் கவிஞருள் அரசாகும்
அவனே தமிழ்மொழிப் பரிசாகும்

கற்பனை சிறந்தது கம்பன்சொல்
கலைத்திறம் நிறைந்தது கம்பன்சொல்
அற்புதச் சித்திரம் அவன்பாட்டு
அறிவுக் கினிப்பதிங் கவன்பாட்டு

சத்தியம் மிளிர்வது கம்பன் சொல்
சாந்தியைத் தருவது கம்பன்சொல்
நித்தியம் பெற்றது அவன்வாக்கு
நிந்தனை அற்றது அவன்வாக்கு

இயல்பாம் வழிகளில் கதைபேசி
இசைமிகும் மொழிகளில் கவிவீசி
நயமிகும் நாடகம் நடப்பதுபோல்
நாவலர் வியந்திடத் தொடுப்பவனும்

கலைமொழி நயங்களைக் காட்டிடவும்
கல்வியின் தெளிவினை ஊட்டிடவும்
நிலைதரும் ஊற்றெனத் தமிழ் நாட்டில்
நின்றிடும் கம்பன் அரும்பாட்டு

கன்னித் தமிழெனும் பெருமையெலாம்
கம்பன் கவிதையின் அருமையினல்
இன்னெரு கம்பனும் வருவானே ?
இப்படி யும்கவி தருவானே !

துயரம் நேர்ந்திடில் துணையாகும்
துன்பம் நீங்கிடப் புணையாகும்
அயர்வுறும் வேளையில் அலுப்பகற்றும்
அச்சம் நீங்கிட வலுப்படுத்தும்

குணங்களில் உயர்ந்திட நலங்கொடுக்கும்
கொடுமையை எதிர்த்திடப் பலங்கொடுக்கும்
வணங்கிய வாயுரை மொழிகூட்டும்
வாழ்க்கையின் பயன்பெற வழிகாட்டும்

சாதியை மதங்களை மறந்திடவும்
சமரச உணர்ச்சிகள் நிறைந்திடவும்
நீதியை அறங்களை நினைப்பூட்ட
நிரந்தரக் களஞ்சியம் அவன்பாட்டு

பண்டிதர் புகழ்ந்திடல் போதாது
பாமரர் மகிழ்ந்திடத் தோதாக
பெண்டிரும் பிள்ளையும் அதைப்படித்துப்
பெருமைகள் அடைந்திடும் விதம்கொடுப்போம்

ஆராய்ச் சிகளால் மயங்காமல்
அவைதரும் சண்டையில் தயங்காமல்
நேராய்க் கம்பனைப் படிப்பவரே
நிச்சயம் கவிரசம் குடிப்பவராம்

திருநாள் நடப்புடன் நில்லாமல்
தினந்தினம் படித்திட எல்லோரும்
வருநாள் கண்டு களித்திடவே
வாழிய தமிழுக் குழைத்திடுவோம்

# பகவத் கீதையின் சிறப்பு

பகவத் கீதையைப் படித்திடுவோம்
பகவான் அருள்பெறத் துடித்திடுவோம்
மிகவும் நல்லறி வுண்டாகும்
மீறிய ஆசைகள் துண்டாகும்

நால்வகை யோகமும் ஆய்ந்திடலாம்
நமக்கெது சரியெனத் தேர்ந்திடலாம்
நூல்களின் எல்லையும் அதுவேயாம்
நுண்ணறி வென்பதும் இதுவேயாம்

'நான்' எனும் அகந்தையைப் போக்கிவிடும்
'நமன்' எனும் பயத்தையும் நீக்கிவிடும்
'ஏன்,எது' என்கிற விவஸ்தையுறும்
'எப்படி' என்பதன் அவஸ்தைஅறும்

கவலையை மாற்றிட மந்திரமாம்
கடமையை உணர்த்திடத் தந்திரமாம்
அவலமும் அச்சமும் அணுகாது
அஞ்ஞா னங்களும் முணுகாது

சத்தியம் அறிந்திட வழிகாட்டும்
சாந்தியும் நிறைந்திட ஒளிகூட்டும்
நித்தியப் பொருளதன் நிலைதெரியும்
நிம்மதி யடைகிற கலைபுரியும்

ஐயமும் திரிபும் மறைந்தொழியும்
ஆசையும் வெறுப்பும் குறைந்தழியும்
வையமும் வானமும் நமதாகும்
வறுமையும் செல்வமும் சமமாகும்

புலன்களை ஆண்டிடச் சக்திவரும்
பொய்களைத் தாண்டிடப் புத்திதரும்
நலன்களைத் தனக்கே கோராது
நாட்டினுக் குழைத்திடச் சோராது

தேவைகள் யாவும் சுருங்கிவிடும்
தெய்வச் சிந்தனை நெருங்கிவரும்
சேவைகள் செய்திடப் பணிவுதரும்
சினம்முதல் தீமைகள் தணிவுபெறும்

வேலைகள் செய்திடத் தயங்காது
வீணர்கள் சுகம்பெற மயங்காது
கூலியைப் பெரிதென நாடாது
குறைந்திட நேரினும் வாடாது

துன்பமும் இன்பமும் மருட்டாது
தூரமும் காலமும் வெருட்டாது
அன்புடை வாழ்வே குறியாகும்
அருளை அறிந்திட நெறியாகும்

எல்லா உயிர்களும் சுகம்பெறவே
எண்ணுதல் ஒன்றே அகம்பெறுவோம்
வல்லான் நினைவே சூழ்ந்துவிடும்
வாய்ந்திடும் பணிசெய்து வாழ்ந்திடுவோம்.

# அனைத்தும் நீயே *


ஆற்றல்கள் அனைத்தும் நீயே
அருளுவாய் எனக்கும் ஆற்றல் ;
போற்றிடும் வீரியம் நீ
எனக் கதைப் புகட்ட வேணும் ;
மாற்றரும் பலங்கள் நீயே
மற்றெனைப் பலவானுக்கு ;
சாற்றரும் ஜீவ சத்தே
சத்தினை எனக்குத் தாராய்.

தீமையை வெறுத்து நீக்கும்
தீரமாய்த் திகழ்வாய் நீயே ;
வாய்மையில் எனக்கும் அந்த
வலிமையை வழங்க வேண்டும் ;
தாய்மையின் சகிப்பு நீயே
தந்தருள் சகிப்புத் தன்மை ;
தூய்மைசேர் ஒழுக்க வாழ்வில்
துலங்கிடும் ஆன்ம ஜோதி.

உடலினும் உயிருக் கப்பால்
உயர்ந் தொளிர் ஆன்ம சக்தி ;
கடலினும் பெரிதாம் உந்தன்
கருணையில் மூழ்கச் செய்வாய் ;
அடைவரும் அமைதி தந்து
அன்பெனும் அமுத மூட்டி ;
மடமைகள் யாவும் மாற்றி
மங்களம் அருள்வாய் போற்றி.

* இப்பாடல் உபநிஷத்துக் கருத்துக்களை உட்கொண்டது, எல்லாச் சமயத்தினர்க்கும் பொதுவானது.

# பெரியோர்



# இயேசு கிறிஸ்து

தூயஞான தேவன்தந்தை பரமன்விட்ட தூதனாய்
துன்பம்மிக்க உலகினுக்கு அன்புமார்க்க போதனாய்
மாயமாக வந்துதித்து மறிகள்சேரும் பட்டியில்
மானிடக் குழந்தையாக மேரிகண்ணில் பட்டவன்
ஆயனாக மனிதர்தம்மை அறிவுகாட்டி மேய்த்தவன்
அன்புஎன்ற அமிர்தநீரின் அருவிகாண வாய்த்தவன்
நேயமாக மாந்தர்வாழ நெறிகொடுத்த ஐயனாம்
நித்தமந்த ஏசுநாதன் பக்திசெய்து உய்குவோம்.

நல்லஆயன் மந்தைபோக நல்லபாதை காட்டினான்
நரிசிறுத்தை புலிகளான கோபதாபம் ஓட்டினான்
கல்லடர்ந்து முள்நிறைந்து கால்நடக்க நொந்திடும்
காடுமேடு யாவும்விட்டுக் கண்கவர்ச்சி தந்திடும்
புல்லடர்ந்து பசுமைமிக்க பூமிகாட்டி மேய்த்தவன்
புத்திசொல்லி மெத்தமெத்தப் பொறுமையோடு
[காத்தவன்
கொல்லவந்த வேங்கைசிங்கம் கூசநின்ற சாந்தனாம்
குணமலைக்குச் சிகரமான ஏசுதேவ வேந்தனே.

ஏசுநாதன் என்றபேரை எங்கிருந்து எண்ணினும்
ஏழைமக்கள் தோழனாக அங்குநம்மை நண்ணுமே
தேசுமிக்க த்யாகமேனி தெய்வதீப ஜோதியாய்
தீமையான இருளைநீக்கி வாய்மைஅன்பு நீதியாய்
பாசமாகப் பரிவுகூறிப் பக்கம்வந்து நிற்குமே
பகைவருக்கும் அருள்சுரக்கும் பரமஞானம் ஒக்குமே
ஈசனோடு வாழவைக்கும் ஏசுபோத இச்சையை
இடைவிடாத யாவருக்கும் எதிலும்வெற்றி நிச்சயம்!

# ஸ்ரீ ரமணரிஷி

சித்தர்களும் முத்தர்களும் செறிந்து வாழ்ந்து
சேர்த்துவைத்த தவப்பயனின் சிறப்பேயாகும்
எத்திசையும் இவ்வுலகில் எங்கும் காணு
எழில்மிகுந்த தமிழ்நாட்டின். அமைதி என்னும்
அத்தகைய மரபினுக்கு ஆக்கம் தந்து
அருணகிரி நாதனுடை அருளைத் தேக்கி
முத்திநெறி காட்டுகின்ற மோனஞான
முழுமதியாம் ரமணமகா முனிவன் ஜோதி

வெற்றியென்றும் வீரமென்றும் வெறிகள்மூட்டி
வேற்றுமையே மக்களிடை விரியச் செய்து
கற்றுணர்ந்த பெரியவரைக் கசக்கப் பேசும்
கசட்டறிவின் தலையெடுப்பைக் காணும் இந்நாள்
பற்றெழித்த மெய்ஞ்ஞானி இவரே யென்று
பலகோடி பக்தர்மனம் பரவச் செய்த
நற்றவசி ரமணரிஷி வாழ்ந்த வாழ்வே
நம்நாட்டின் பெரும்புகழின் ஜீவநாடி

அணுவினொடு அணுமோதி அழியச் செய்து
ஆருயிர்கள் பதைபதைக்க அவதி மூட்டப்
பணவெறியும் பார்வெறியும் பற்றித் தூண்டும்
பாதகமே சாதனையாய்ப் படிக்கும் இந்நாள்
அணுவினொடு அணுசேர அணைத்து நிற்கும்
ஆண்டவனின் திருவருளை அறியச் செய்த
குணமலையாம் ரமணரிஷி மோன வாழ்வே
கொடுமைகளை நம்மிடையே குறைக்கும் போதம்

இன்றிருந்து நாளைக்குள் மறைந்து போகும்
இச்சிறிய உடலினுக்குள் புகுந்து கொண்டு
நன்றிருந்து பேசுகின்ற 'நான்' யார் என்று
நாளில்ஒரு தரமேனும் நாடிப் பார்த்தால்
என்றிருந்து எங்குவந்தோம் 'எதுநாம்' எல்லாம்
எளிதாகக் கண்டுகொள்வாய் என்றே சொல்லி
குன்றிருந்த விளக்கேபோல் திசையைக் காட்டும்
குறிக்கோளாம் ரமணமகா குருவின் வாழ்க்கை

இந்திரியச் சுகங்களுக்கே ஓடியாடி
இழிவடைந்து துறவடைந்தோர் பலபேருண்டு
வந்தகடன் தீர்ப்பதற்கு வழியில்லாமல்
வைராக்யம் பூண்டவர்கள் வகையும் உண்டு
கந்தையற்றுத் தரித்திரத்தின் கவலை மாற்றக்
காவியுடை அணிந்தவரைக் காண்ப துண்டு
வந்துதித்த நாள்முதலாய் பரத்தை நாடும்
வைராக்யம் ரமணரிஷி வாழ்வாய் நிற்கும்

சக்திகளில் மிகச்சிறந்த சக்தியாகும்
துன்பங்கள் சகிப்பதையே சாதித் திட்டான்
வித்தைகளில் மிகப்பெரிய வித்தையாகும்
விருப்புவெறுப் பில்லாத வேள்வி செய்தான்
உத்திகளில் உச்சநிலை உள்ளதாகும்
உள்ளத்தில் பொய்யாமை உடைய ஞானன்
சித்தி கண்ட ரமணரைநாம் சிந்தித்திட்டால்
சித்தசுத்தி பெற்றுமிகச் சிறந்து வாழ்வோம்.

# ராஜாஜி

கூரிய அறிவால் கொண்ட
கொள்கையின் உயர்வால் கூறும்
சீரிய ஒழுக்கம் காத்த
சிறப்பினுல் எதையும் செய்யக்
காரியத் திறமை வாய்ந்து
கடனறி கார ணத்தால்
யாரினும் ராஜா ஜீயை
அறிஞர்கள் போற்று வார்கள்.

நஞ்சினில் மிகவும் தோய்த்து
நாசமே கருதிப் பாய்ச்சி
வெஞ்சின வசைகள் கோத்து
விட்டன பாணம் எல்லாம்
பஞ்சினிற் பட்ட வேல்போல்
பயனற, ராஜா ஜீயோ
கொஞ்சமும் கோப தாபக்
குறியிலாக் குணக்குன் ருனன்.

பொதுநலம் ஒன்றே யன்றிப்
புகழ்ச்சியில் மயங்க மாட்டான்
எதுநலம் என்ற பேச்சில்
எதிர்ப்புகள் எதற்கும் அஞ்சான்
மதிநலத் தெளிவு கொண்ட
மாபெரும் கர்ம யோகி
துதிபெறத் தமிழர் மேன்மை
துலக்கினேன் ராஜா ஜீயே.

வேங்கைகள் சூழ்ந்த மான்போல்
விடுபட வழியில் லாமல்
தீங்குகள் சுற்றி நின்று
திடுக்கிடச் செய்த போதும்
ஆங்குமான் கல்லோ! என்ன
அசைவிலா உறுதி காட்டும்
பாங்குளான் ராஜா ஜீயே;
பகைவரே பணியும் பண்பான்.

தாழ்ந்தவர் உயர்ந்தோர் என்று
ஜாதியால் குறித்தல் பாபம்
மாந்தருள் தீண்டல் என்றல்
மடமையுள் மடமை என்று
காந்தியை நாமெல் லாரும்
காண்பதன் வெகுநாள் முன்பே
சாந்தமாய் வாழ்க்கை தன்னில்
சாதித்தோன் ராஜா ஜீயே.

பழுதிலா வாழ்க்கை தந்த
பயமிலா நெஞ்சத் தாலே
எழுபத்து நான்காம் ஆண்டில்
இன்னமும் இளைஞ னேபோல்
எழுதரும் மேலோன் காந்தி
இடையருப் பக்த ளுகை
வழுவிலா அரசு காட்டும்
ராஜாஜி வாழ்க வாழ்க.

# வல்லபாய் பட்டேல்

இல்லாத காந்திமகான் இருந்தாற்போல,
எப்பொழுதும் காந்திவழி எடுத்துக்காட்டி
கொல்லாத விரதமதே குறியாய்க் கொண்டு
குற்றமற்ற சத்தியமே நெறியாய்க்கூடி
கல்லான மனமுடையோர் எதிர்த்தபோதும்
கலங்காத தெளிவுடைய கர்மவீரன்
வல்லாளன் வல்லபாய் பட்டேல் மாண்ட
வருத்தமதை விரித்துரைக்க வார்த்தை யுண்டோ.

காந்தியென்ற தவநெருப்பில் காய்ச்சிக் காய்ச்சிக்
கசடொழிய மாற்றுயர்ந்த கனகமாகும்
சாந்தியென்ற குளிர்மதியின் தன்மையோடும்
சத்தியத்தின் வாளேந்தும் சர்தாராகும்
மாந்தருக்குள் தீயவரை அடக்கியாளும்
மந்திரியின் தந்திரத்தின் மார்க்கமெல்லாம்
வாய்ந்திருந்த வல்லபாய் பட்டேல்மாண்ட
வருத்தமதைப் பொறுத்திருக்க வலிமைவேண்டும்.

அன்புமுறை தவருத அமைச்சனுகும்
அரசுநிறை குறையாத ஆற்றலுள்ளோன்
துன்பநிலை பலகோடி சூழ்ந்திட்டாலும்
துளங்காமல் துணிவுரைக்கும் துணைவனுகும்
இன்பசுகம் தனக்கெதுவும் வேண்டாளுகி
இந்தியத்தாய் திருப்பணிக்கே எல்லாமீந்தான்
நம்பகத்தின் வடிவெடுத்த வல்லபாயை
நாமிழந்த பெருந்துயரில் நாதன்காக்கும்,

காந்தியண்ணல் மறைந்திடித்த கலக்கம்தீர்ந்து
கண்திறந்து புண்மறையக் காணுமுன்னால்
சாந்தனவன் நமக்களித்த காவலாளன்
சர்தார்நம் வல்லபாய் பட்டேல் சாக
நேர்ந்துவிட்ட இத்துயரால் நமதுநெஞ்சம்
நெக்குவிடத் தக்கதுதான் என்றிட்டாலும்
சோர்ந்துவிடக் கூடாது பட்டேல் போல
சுதந்திரத்தைக் காந்திவழி தொடர்ந்துகாப்போம்.

பிறந்தவர்கள் எல்லோரும் இறந்தேபோவார்
பின்னிருக்கும் தலைமுறையர் பெருமைகொள்ளும்
அறந்தெரிந்து வாழ்ந்தவரே அறிஞராவார்
அன்னவர்க்கே மக்களெல்லாம் அருமை செய்வார்
திறந்தெரிந்து காந்திமகான் ஜோதியான
திருவிளக்கு மங்காமல் தினமுங்காத்து
மறைந்துவிட்ட வல்லபாய் நமக்குத்தந்த
மணிவிளக்கை நாம்காத்து வாழவேண்டும்.

# வாழ்க முதலியார்

சலியாத சேவையும் தளராத ஊக்கமும்
தணியாத ஆர்வமுள்ளோன் ;
நலியாத சொற்களால் நவசக்தி யூட்டிடும்
நயமிக்க தேசபக்தன் ;
நிலையான கல்வியின் நெளியாத கொள்கையின்
நேரான நெறியில் நிற்போன் ;
கலியாண சுந்தர முதலியார் தமிழன்பர்
கண்ணான ஒருவனாகும்.

பாடெலாம் தான்பட்டுப் பலனெலாம் பிறர்கொள்ளப்
பங்கின்றி உதவு பண்பன் ;
ஏடெலாம் மேல்எனும் 'என்கடன் பணிசெய்தல்'
என்பதே எண்ணியெண்ணி
நாடெலாம் வாழவே நாளெலாம் தன்சுகம்
நாடாது பாடுபடுவோன் ;
வீடெலாம் தமிழ்மக்கள் கலியாணசுந்தரன்
வெற்றிகொண் டாடவேண்டும்.

கொல்லாமை பொய்யுரை கூறாமை என்பதே
குறியாகக் கொண்ட தமிழை
கல்லாத பேர்களும் களிகொள்ளத் தந்திடும்
கலியாண சுந்தரத்தின்
செல்லான அறுபதாம் ஆண்டுத் திருநாளிலே
தெய்வத்தைச் சிந்தைசெய்து
வல்லாண்மை குறையாமல் நூறாண்டும் அவன்வாழ
மனமார வாழ்த்துகின்றோம் !

# பாரதிக்கு வெற்றிமாலை

சுப்ரமண்ய பாரதிக்கு வெற்றிமாலை சூட்டுவோம்
சொன்னவாக்குப் பின்னமின்றிச் சொந்தஆட்சி
[நாட்டினோம்
இப்ரபஞ்ச மக்கள்யாரும் இனியவாழ்த்துக் கூறவே
இன்றுஎங்கள் பரததேவி ஏற்றபீடம் ஏறினாள்

சுத்தவீர தீரவாழ்வு சொல்லித்தந்த நாவலன்
சூதுவாது பேதவாழ்வு தொலையப்பாடும் பாவலன்
சக்திநாடிப் புத்திசெல்லச் சாலை கண்ட சாரதி
சத்தியத்தில் பற்றுகொண்ட சுப்ரமண்ய பாரதி

ஆடுமாடு போலவாழ்வு அடிமைவாழ்வு என்பதை
அரிவரிக்கு வழியிலாத அனைவருக்கும் தென்பட
பாடிநாடு வீடுதோறும் வீறுகொள்ளப் பண்ணினான்
பாரதிக்கு வேறொருத்தர் நேருரைக்க ஒண்ணுமோ

அஞ்சிஅஞ்சி உடல்வளர்க்கும் அடிமைப்புத்தி நீக்கினான்
அன்புமிஞ்சும் ஆண்மைவாழ்வில் ஆசைகொள்ள
[ஊக்கினான்
கெஞ்சிக்கெஞ்சி உரிமைகேட்கும் கீழ்மைஎண்ணம்
[மாற்றினான்
கேடிலாது மோடிசெய்யும் காந்திமார்க்கம் போற்றினான்

அமைதிமிக்கத் தமிழ்மொழிக்கு ஆற்றல்கூட்ட நாடினான்
அறிவுமிக்கத் தமிழருக்கு அச்சம்போக்கப் பாடினான்
சமதைகண்டு மனிதருக்குள் ஜாதித்தாழ்வை ஏசினான்
சமயபேதம் இல்லையென்ற சத்தியத்தைப் பேசினான்

# காந்தி சரித்திர நொண்டிச் சிந்து

காந்தியின் சரிதம் சொல்லுவேன்—நல்லோர்
காதுக் கினிப்பதுஅதைக் காட்டிலு முண்டோ?
மாந்தர்க்குயர் தர்ம மெல்லாம்—காந்தி
மகாத்மாவின் வாழ்க்கையிலே மலிந்திருக்கும்
புண்ணியக் கதை இதுவே—கேட்டால்
பூதலத்தில் மூர்க்கருக்கும் பொறுமைவரும்
கண்ணியம் கனதையென்று—பழைய
கதைகளில் முன்பு நாம் கேட்டனவெல்லாம்
சத்தியம் வடிவெடுத்து—வேதம்
சாந்தி சாந்தியென்ற சாந்தத்துடனே 5

இத்தரையிற் கண்டுகளிக்க—இன்னும்
இருந்தே அறந்தருமோர் பெருந்தகையார்
கூர்ஜர வடநாட்டில்—நல்ல
குணமிகும் போர்பந்தர் சமஸ்தானம்
தார்முடி மன்னர்க்கு—ராஜ
தந்திர முறைக்குந்திறல் மந்திரிகளாய்
வாழ்ந்தவர் பரம்பரையில்—குஜராத்
வாணிய குலத்துக்கொரு ஆணி யெனலாம்
கரம்சந்த் என்பவரின்—மனைவி
கற்பில் அருந் ததியென்னும் பொற்புடையவர் 10

புத்திர வதியாரின்—மூன்றும்
புத்திரரா கப்பிறந்தார் உத்தமர் காந்தி
அன்னையுந் தந்தையுமே—தாம்
அறிந்த கடவுளென்று நடந்திடுவார்
பள்ளிப் பருவத்திலும்—சிறு
பையன்களின் துடுக்குகள் செய்யமாட்டார்

எள்ளளவும் பொய்பேசார்—மற்ற
எவரொடும் தவறுகள் எதுவும் செய்யார்
ஆசான் மார்களுங்கூடக்—கண்டே
ஆச்சரியப் படும்படி நடந்துகொள்வார்

பன்னிரண்டு வயதினிலே—கஸ்தூரி
பாயென்னும் உத்தமியை மணமுடித்தார்
தாயார் பெருங்குணமும்—கொண்ட
தாரந்தனக் கேற்றபடி வாய்த்த நலமும்
ஓயாப் புகழுடனே—காந்தி
உலகினுக் குழைப்பதற் குதவியென்பார்
பெண்ணின் பெருமையன்றே—நாட்டின்
பெருமைகள் யாவினுக்கும் பிறப்பிடமாம்
பத்தொன் பதுவயதில்—சீமை
பாரிஸ்டர் பரிக்ஷைக்குப் போய்ப்படிக்க

ஆசைகொண்டார் காந்தி—கேட்ட
அறிந்தவர் பந்துமித்ரர் அனைவருமாய்
சீமைக்குப் போனாலே—ஒழுக்கம்
சீர்கெட்டு நம் ஆசாரம் போய்விடுமென்று
தடுத்தார் பலபேர்கள்—பெற்ற
தாயாரும் சம்மதிக்கத் தயங்கினின்றார்
காந்தியின் பிடிவாதம்—கண்டு
கடைசியில் அன்னையொரு விதந்தேறி
"மூன்றுவிதச் சபதங்கள்—செய்து
முற்றுமவை காப்பேனென்று சத்தியஞ்செய்தால்

தருவேன் விடை" யென்று—பெற்ற
தாயுரைத்த வாசகத்தைத் தலைவணங்கி
"அருள்வீர் என்னசபதம் ?"—என்றார்
அன்னையவள் தன்மகனை யணைத்துச்சொல்வாள்

“மாமிசம் மதுவுண்ணல்—பர
மாதர்களைக் காமுறுதல் இவைமூன்றும்
செய்யேன் என்றெனக்கே—சத்தியம்
செய்தபின்னர் சீமைக்குச் செல்லுக” என்றாள்
‘செய்வேன் அப்படியே—அந்தச்
சீமையிலே மட்டுமல்ல சென்மமுழுவதும்

செய்வேன்’ என்று சொல்லி—ஒரு
சிறந்த சமணசந்யாசியின் முன்னால்
சத்தியம் செய்து கொடுத்தார்—தாய்
சந்தோஷமாகவிடை கொடுத்தனுப்பச்
சீமைக்குச் சென்றங்கே—தாய்க்குச்
செய்துவந்த சத்தியங்கள் பிசகாமல்
பாரிஸ்டர் பட்டம் பெற்றுத்—திரும்பிப்
பம்பாய் நகரில்தொழில் செய்யும்போது
தென்னாப்பிரிக்காவிலே—சில
தெரிந்த மஹம்மதிய வியாபாரிகள்

வக்கீல் தொழிலாக—ஒரு
வழக்கை நடத்த அங்கு வரக்கேட்டார்
போனார் காந்தியங்கே—முன்னால்
போயிருக்கும் இந்தியர்கள் படும்பாட்டைப்
பார்த்தார் பரிதவித்தார்—மீண்டும்
பம்பாய் திரும்ப மனம் படியாமல்
இந்தியரின் உரிமைக்காய்—அங்கே
இருபது வருஷங்கள் இருந்துழைத்தார்
விண்ணப்பம் செய்துபார்த்தார்—லண்டனில்
வேண்டிய துரைகளைக் கெஞ்சிக்கேட்டார்

கண்டபலன் ஒன்றுமின்றிக்—கடைசியில்
தன்கையே தனக்குதவி என்றுதுணிந்தார்
அநியாயச் சட்டங்களைச்—சிறிதும்
அஞ்சாமல் சாந்தமுடன் எதிர்ப்பதென்றே
இந்தியரை ஒன்று திரட்டிக்—கேட்க
எல்லாரும் சரியென்று ஒத்துக்கொள்ளவே
தொடுத்தார் அறப்போரை—இந்தத்
தொல்லுலகம் முன்னறிந்த தில்லையெனலாம்
சாந்தமும் சத்தியமும்—நம்பும்
சர்வேசன் கருணையும் படையாகக்

காந்தியும் போர்தொடுத்தார்—தாமே
கைவிரற் பதிவுசெய்யும் சட்ட மறுத்தார்
தண்டனை யிரண்டுமாதம்—பெற்றுச்
சந்தோஷ மாகச்சிறை முதலில் சென்றார்
ஆயிரக் கணக்காக—இந்தியரும்
அங்கிருந்த சீனர்களும் சிறைக்குவந்தார்
இந்தவிதம் எட்டுவருஷம்—அங்கே
இடைவிடாம லேயுழைத்தார் இடர்பொறுத்தார்
பலமுறை சிறைபுகுந்தார்—மக்கள்
பத்தினியுங் கூடச்சிறைப் பயத்தைவிட்டார்

கல்லுடைத்துச் செக்குமிழுத்தார்—சிறையின்
கக்கூசில் மலஜலம் வாரியெடுத்தார்
வீதியில் விலங்குடனே—சர்க்கார்
வேண்டுமென்று நடத்தவும் சகித்திருந்தார்
இத்தனை துயரும் சகித்தே—அங்கே
இந்தியரின் கண்ணியத்தைக் காத்து வைத்தார்

கைரேகைப் பதிவு செய்தல்—இந்தியரைக்
கட்டாயக் கூலி செய்யக் கப்பலேற்றல்
தலைவரி கொடுப்பதிவை—சர்க்கார்
தள்ளிவிடச்சம்மதிக்க வெற்றி யடைந்தார் 55

இந்தியா திரும்பி வந்தார்—சொந்த
இந்நாட்டின் விடுதலைக் குழைத்திடவே
சபர்மதி ஆச்சிரமத்தை—ஏற்படுத்தி
ஸத்யாக்ர ஹப்பயிரை வளர்த்துவந்தார்
சம்பரான் ஜில்லாவினிலே—அவுரிச்
சாகுபடி கூலிகளைத் தாங்கி யுழைத்தார்
கெய்ரா ஜில்லாவினிலே—விளைவு
கெட்டவர்க்கு நிலவரி விட்டிடச் செய்தார்
ஜெர்மன் சண்டைவரக்—காந்தி
சேனையும்பண மும்மிகச் சேர்த்துக் கொடுத்தார் 60

நன்றியை நினைப்பார்கள்—இந்த
நாட்டுக்கொரு நல்லவழி பிறக்கு மென்றே
நம்பியிருந் தார்காந்தி—ரௌலட்
சட்டங்களால் இந்தியரை நசுக்க எண்ணம்
கொண்டதைக் கண்டபின்னர்—இதுவரை
கொண்டிருந்த நம்பிக்கை முற்றுந் துறந்தார்
சாத்வீகப் போர்தொடுக்க—ஜனங்களைச்
சத்திய மெடுத்துக்கொள்ளப் புத்தி புகன்றார்
பற்பல இடங்களிலே—வெகு
பரபரப் புடன்மக்கள் பதைத்தெழுந்தார் 65

நாடெங்கும் கூக்குரலும்—பஞ்சாப்
நாட்டிற்சில பேர்புரிந்த பதட்டங்களும்
‘டயர்’ என்றொருபாவி—அன்று

ஜலியன்வா லாவிற்சுட்ட சங்கதியும்
ராணுவச் சட்ட அமுலும்—இந்த
நாட்டிற் பிறந்தவர்கள் மறப்பாரோ
கிலாபத் விஷயத்திலும்—ஆங்கிலரால்
கிடைத்திருந்த வாக்குறுதி தவறியதால்
ஒத்துழைப் பிணிமேலே—சிறிதும்
உதவா தென்றுமனம் உறுதிகொண்டார்

கல்கத்தா விற்கூடிய—விசேஷக்
காங்கிரஸின் ஒத்துழையாத் தீர்மானம்
நாட்டுக்கொரு புத்துணர்ச்சி—தந்து
நல்லபல வேலைகளும் நடக்கையிலே
சௌரிசாரா வென்னுமிடத்தில்—வெறிகொண்ட
ஜனம் சிலர் போலீசுக் கச்சேரிக்குத்
தீயிட்டுக் கொளுத்தியதில்—உள்ளே
சிக்கிய இருபத்தொரு பேருமாண்டார்
கேட்டார் இதைக் காந்தி—இயக்கம்
கேட்டுவிட்ட தென்றுகண்டு சட்டமறுப்பைத்

தாமே நிறுத்தி விட்டார்—அந்தத்
தகைமையை உலகென்றும் புகழுமன்றோ
சிலநாள் சென்றதன் பின்—காந்தியைச்
சிறைப்பிடித்தார் குற்றப் பொறுப்பை யெல்லாம்
தம்மேல் ஒத்துக்கொண்டு—அதற்குத்
தண்டனையா றுவருஷம் கொண்டு சிறையில்
இரண்டுவ ருஷமிருந்தார்—குடலில்
ஏற்பட்ட நோவினுக்குச் சிகிச்சை செய்து
விடுதலை செய்தார்கள்—பிறகு
வெகுநாள் நிர்மாண வேலைகள் செய்தே

காங்கிரஸைப் பலப்படுத்திக்—குடிசைக்
கைராட்டைத் தொழிலெங்கும் பரவச் செய்தார்
முஹம்மதலியின் வீட்டில்—ஹிந்து
முஸ்லிம்களின் ஒற்றுமைக்குப் பட்டினிகொண்டார்
ஆறு வருஷம் பொறுத்தார்—நாட்டின்
அடிமைத் தனங்குறைய ஆள்வோர்க்கு
எண்ணமில்லை யென்று கண்டு—வைஸராய்
இர்வினுக்குத் தம்முடைய எண்ணமெழுதி
சத்தியப் போர் தொடுத்தார்—உப்புச்
சட்டத்தை மறுத்திடுவ தென்று 'டாண்டி'க்குப்
புறப்பட் டார்காந்தி—அந்தப்
போதெழுந்த உணர்ச்சியை ஏது சொல்லுவோம்
ஆச்சரியம்! ஆச்சரியம்!—அதை
ஆராலும்மு டியச் சொல்ல முடியாது
டாண்டியில் சட்ட மறுத்தார்—ஒருநாள்
ஜாமத்தில் வந்து சர்க்கார் கைதி செய்தார்
நாட்டிலெந்த மூலைமுடுக்கும்—சண்டை
நடந்ததில் லக்ஷம் பேர் சிறை புகுந்தார்
ஸாத்வீகம் தவறுமல்—ஜனங்கள்
சந்தோஷ மாகப் பல ஹிம்சை சகித்தார்
இந்தவிதம் பத்துமாதம்—சண்டை
இடை விடாமலெங்கும் நடந்திடவே
காந்தியை வெளியில் விட்டுச்—சர்க்கார்
காந்தி—இர்வின் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்
இரண்டாம் வட்டமேஜைக்—கூட்டத்
திந்தியக் காங்கிரஸின் ப்ரதிநிதியாய்

வீரமொழிகள் புகன்றார்—ஏழைகள்
விடுதலை விட்டெதுவும் வேண்டாமென்று
இந்தியா வருமுன்னால்—ஸர்க்கார்
இர்வின் உடன்படிக்கை மீறிவிட்டதால்

வில்லிங்டன் வைஸராயைப்—பார்க்க
விடைவர வேணுமென்று சேதி விடுத்தார்
வைஸராய் மறுத்து விட்டார்—வேறு
வழியின்றிக் காந்தியும் கைதியானார்
சிறையில் இருக்கும்போது—அங்கே
சீமையின் மந்திரி திட்டமொன்றினால்
தாழ்த்தப்பட்ட ஹிந்துக்களை—தேர்தல்
தனித்தனித் தொகுதியிற் பிரித்து வைத்தார்
காதில் விழுந்த உடனே—காந்தி
கட்டாயம் பட்டினியிற் சாவேனென்றார்

எங்கும் பரபரப்பாய்ப்—பூனா
எரவாடா ஒப்பந்தமும் நிறைவேறி
சிறையில் இருந்தபடியே – ஹரிஜன
சேவை செய்ய வசதிகள் செய்து கொடுத்தார்
சிலநாள் சென்றதன் பின்—ஹிந்துக்கள்
தீண்டாமை விஷயத்தில் மனமிரங்கத்
தாம் ஒரு மூன்று வாரம்—பட்டினித்
தவஞ் செய்யக் கடவுளின் ஆணை யெவரும்
தடை சொல்லக் கூடாதென்றும்—காந்தி
தாமெடுத்த விரதத்தைச் சர்க்காரஞ்சி


விடுதலை செய்து விட்டார்—உடனே
சட்டமறுப் பைச் சிறிது நிறுத்தச் சொல்லி
பட்டினியை வென்று முடித்தார்—கிழவர்
பயந்தவர் யாவரும் வியந்திடவே

தலைவர்க ளோடுகலந்து—முடிந்தால்
சண்டையை முடித்தே ஒரு ராஜி செய்யவே
வைஸராய் வில்லிங்டனைத்—தாம்
வந்துகாணச் சம்மதிக்கத் தந்தி கொடுத்தார்
பதில் தந்தி மறுத்திடவே—முதலில்
பாடுபட்டுத் தாம்வளர்த்த பயிரான
சபர்மதி ஆச்சிரமத்தை—மூடித்
தாமும் சில சீடர்களும் சிறை புகுந்தார்
சிறையினில் முன்போல—ஹரிஜன
சேவைக்கு வசதிசர்க்கார் குறைத்ததனால்
வசதிகள் அவைபோனால்— இனித்தாம்
வாழ்வதன் லக்ஷியம் போனதென்றே
பட்டினியிற் சாகத் துணிந்தார்—உலகம்
பயந்து நடுநடுங்கிப் பரதவிக்கத்
தெய்வச் செயலே போல்—காந்தியைத்
திரும்பவும் சர்க்கார் விட்டு விடவே
செய்வதுதான் இன்னதென்று—தமக்குத்
தெளிய விளங்கவில்லை அதனாலே
‘கிச்சிக் கிச்சித் தம்பளம்’ போல்—சர்க்கார்
பிடிக்கவும் விடுக்கவும் செய்ய நடத்தல்
கண்ணியக் குறைவென்று—தண்டனைக்
காலம் ஒருவருஷம் கழியுமட்டும்
ஹரிஜன சேவை ஒன்றே—அதன்பின்
ஆண்டவன் விட்டவழி விட்டுமென்று
ஏழைகளுக் குழைப்பதற்கே—தவம்
ஏந்தும் காந்தி புகழ் என்றும் வாழ்கவே!

*[‘ஆனந்த விகடன்’ பத்திரிகையில்
பரிசுபெற்று வெளிவந்தது.]*

# அரசியல்

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI



# சுதந்திர தேவி

சுதந்திர தேவியைத் தொழுவோம் வாரீர்
சுகம்பெற அதுதான் வழியாம் பாரீர்
பதந்தரும் மானிடப் பண்புகள் வளரும்
பரமனை உணர்ந்திடப் பக்தியும் கிளரும்

விடுதலை யடைந்தது சுதந்திரம் அல்ல
வெற்றிகள் என்பதும் வெறிதரும் தொல்லை
கெடுதலை நீக்கிடக் கிருபைகள் செய்யும்
கேண்மையின் வடிவே சுதந்திரத் தெய்வம்

அன்னிய உதவியின் அவசியம் நீக்கும்
அதுதான் சுதந்திர ஆற்றலைக் காக்கும்
பொன்னிலும் உயர்ந்தது சுதந்திரச் சிறப்பு
பொறுமையும் வாய்மையும் அதற்குள பொறுப்பு

ஆயுத வெறிகளை அப்புறம் ஒதுக்கி
அன்பின் நெறிகளில் அரசியல் புதுக்கி
சாய்கிற வரையிலும் சமரசம் பரப்பி
சண்டைகள் விலக்குதல் சுதந்திரப் பொறுப்பு

அற்புதன் காந்தியின் அறநெறி கொண்டோம்
அடிமை விலங்குகள் அகன்றன கண்டோம்
கற்பெனக் காந்தியின் நன்னெறி காப்போம்
கருணையும் ஆற்றலும் கலந்திட நோற்போம்.

# நம் சுதந்திரம்

சுதந்திரம் அடைந்தோம் என்ற
சுகங்களை அடையுமுன்னால்
எதிர்ந்தன எதிர் பாராத
இடர்பல சகித்து வென்றோம்
முதிர்ந்துள யுத்த வேகம்
முற்றிலும் மறைந்து போகும்
விதந்தனில் நமது நாட்டின்
சுதந்திரம் உதவ வேண்டும்.

அரும்பெரும் காந்தி யண்ணல்
அற்புத அறிவு சேர்ந்த
பெருந்திறல் காங்கி ரஸ்தன்
பெருமையிற் குறைந்து போக
குறும்புகள் வளர்ந்திடாத
குறியுடன் கொள்கை காத்து
விரும்பிடும் ராம ராஜ்ய
சுதந்திரம் விளங்க வேண்டும்.

அதிகார மோக மின்றி
ஆதிக்யத் தாகமின்றி
சதிகார எண்ணம் சேரா
சமதர்ம உணர்ச்சி யோடு
துதிபாடி நாட்டை வாழ்த்தும்
தொண்டர்கள் சூழ்ந்து நிற்கும்
நிதியாக காங்க்ரஸ் நின்று
சுதந்திரம் நிரக்க வேண்டும்

காந்தியை மறந்திடாமல்
கருணையைத் துறந்திடாமல்
சாந்தியிற் குறைந்திடாமல்
சத்தியம் பிரிந்திடாமல்
மாந்தருக் கறிவுகாட்டும்
மாபெரும் ஜோதியாக
நேர்ந்துள நமது நாட்டின்
சுதந்திரம் நிலைக்க வேண்டும்.

பாரினில் ஒருநாடேனும்
நம்மிடம் பகைகொள்ளாமல்
சீரிய முறையில் ராஜ
நீதியின் செம்மை காத்து
போரிட நினைப்பா ருண்டேல்
புலிகண்ட மான்போல் அஞ்ச
தீரமாய் நமது நாட்டின்
சுதந்திரம் திகழ வேண்டும்.

ஆயுத வெற்றிகள் மிஞ்சி
அழிவுக்கே முனைந்து நிற்கும்
தீயன குறிகள் கண்டு
உலகெலாம் திகைக்கும் துன்பை
நாயகன் காந்தி தந்த
நன்னெறி தன்னைக் காட்டும்
தாயகம் நமது நாட்டின்
சுதந்திரம் தடுக்க வேண்டும்.

# சுதந்திரச் சபதம்

அன்னியர்கள் நமைஆண்ட அவதிநீங்கி
 அரசுரிமை முழுவதையும் அடைந்தோம் நாமே
என்னினும்என்? சுதந்திரத்தின் இன்பம் காண
 எவ்வளவோ மனமாற்றம் இன்னும்வேண்டும்;
தன்னலமே பெரிதாகக் கருதிடாமல்
 பொதுநலமே தன்னலமாயத் தரிக்கவேண்டும்;
பொன்னின்உயர் சுதந்திரத்தைப் பாதுகாக்கப்
 பொறுப்புணர்ந்து கடமைகளைப் புரியவேண்டும்.

உயிர்க்கொலையை அஞ்சிஅஞ்சி ஒதுக்கவேண்டும்;
 உயிர்கொடுக்க அஞ்சாத உறுதிவேண்டும்;
பயிற்சியுடன் அன்புநெறி பழகவேண்டும்;
 பல்லுயிரும் நல்லுறவாம் பரிவுவேண்டும்;
முயற்சிமிக உணவளிக்கும் தொழில்களெல்லாம்
 முன்னேறப் புதுமுறையில் முனைதல்வேண்டும்,
உயர்ச்சியென்றும் தாழ்ச்சியென்றும் பேதமின்றி
 உழைப்புகளில் சமமான ஊக்கம்வேண்டும்.

அஞ்ஞானச் சூழ்நிலையை அதிகமாக்கி
 அருள்மறந்த செயல்களுக்கே ஆசைமூட்டும்
விஞ்ஞான வெறிமறைய வேண்டுமென்ற
 வித்தகமாய் சத்தியத்தின் விளக்காய்நிற்கும்
இஞ்ஞாலம் இதுவரைக்கும் காணாத்தூயன்
 எம்மான்அக் காந்திமகான் ஏந்திச்செய்த
மெய்ஞ்ஞானத் தவநெறியால் நமதுதேசம்
 மேவியநல் சுதந்திரத்தின் மேன்மைகாப்போம்.

# காந்தி தந்த குடியரசு

எண்ணரிய தியாகிகளை எழும்பவைத்த
எழுதரிய காந்திமகான் தவத்தினாலே
மண்ணுலகம் இதுவரையில் அறியாநல்ல
மார்க்கத்தில் அடிமைமனம் மறையச்செய்து
கண்ணனைய சுதந்திரத்தின் காட்சிமேவ
கருதரிய குடியரசு தொடங்கக் கண்டோம்
திண்ணமுடன் காந்திவழி நிற்போமானால்
தீராத குறைகளெல்லாம் தீர்ந்துபோகும்.

புண்படுத்தல் எதற்கெனினும் தீதேஎன்றும்
பொதுவான நல்லறிவை மிகவும்போற்றி
உண்பதற்கும் உடுப்பதற்கும் மட்டுமின்றி
உயிர்களுக்கும் சமதர்ம உணர்ச்சிகாட்டும்
பண்புடைய மனப்பான்மை பலிக்கவேண்டி
பக்தியுடன் காந்திவழி பயில்வோமானால்
மண்புகழும் குடியரசு நமதேயாகும்
மனிதருக்குள் சண்டைகளை மறையச்செய்வோம்.

சட்டதிட்டச் சிறப்புமட்டும் சரிசெய்யாது
சைநியத்தின் மிகுதிமட்டும் சாதிக்காது
கட்டுதிட்ட உணர்ச்சியுடன் குடிகளெல்லாம்
கடமையெனப் பொறுப்புகளைக் கருதவேண்டும்
திட்டமிட்டுக் காத்திருந்து சேவைசெய்யும்
தியாகபுத்தி குடியரசின் தேவையாகும்
வட்டமிட்டு நம்மறிவைப் பாதுகாக்க
வள்ளலந்தக் காந்தியைநாம் வணங்கவேண்டும்.

பிறநாட்டு வழிகளைநாம் பின்பற்றாமல்
பிற்போக்கு வெறிகளுக்கும் இடங்கொடாமல்
திறம்காட்டி மெய்யறிவின் தெளிவும்சேர்ந்த
சீலர்களைத் தேர்ந்தெடுக்கத் தெரிந்துகொண்டால்
உறங்காமல் காந்திமகான் உபதேசத்தை
ஊரூராய்ப் பரப்புவதில் ஊக்கம்கொள்வோம்
அறங்காட்டும் புதுமுறையில் ஆட்சி செய்வோம்
அதற்கென்றே அவதரித்தார் காந்தி அண்ணல்.

எந்திரங்கள் தந்தவெறி குறையவேண்டும்
எங்கெங்கும் கைத்தொழில்கள் நிறையவேண்டும்
தந்திரங்கள் பணம்பறித்தல் தடுக்கவேண்டும்
தன்னலங்கள் தலையெடுப்பை ஒடுக்கவேண்டும்
சிந்தனையில் தெய்வபயம் சேரவேண்டும்
செய்கையெல்லாம் பொதுநலத்தைக்
[கோரவேண்டும்
மந்திரமாய் காந்திமகான் திருநாமத்தை
மக்களெல்லாம் மறவாமல் ஜெபிக்கவேண்டும்.

# கற்பகச் செடி

சுதந்தரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகந்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்தரம் இருந்தால்தான்
நிதந்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்தர நிலைவேண்டும்.

சோறும் துணிமணி சுகங்களைக் காட்டிலும்
சுதந்தர உணர்வே மேலாகும்
கூறும் நலங்களை விலைகொடுத் தாயினும்
கொள்ளத் தகுந்தது சுதந்தரமே.
வீறும், கருணையும், வித்தக ஞானமும்
விளைவது சுதந்தர விருப்பத்தால்
தேறும் பொழுதினில் சுதந்தரம் தொழத்தகும்
தெய்வம் என்பது தெளிவாகும்.

உத்தமன் காந்தியின் மெய்த்தவ பலத்தால்
உலகம் இதுவரை கண்டறியா
சுத்தநல் வழிகளில் சுதந்தரம் அடைந்தோம்
சொல்லரும் பாக்கியம் நமதாகும்
கைத்தலம் கிடைத்துள கற்பகச் செடிஇதைக்
காயவும் கருகவும் விடமாட்டோம்
சத்திய சபதம் பக்தியில் காட்போம்
சர்வேசன் துணை புரிந்திடுவான்!

UNIVERSITY EXTENSION

# தேசிய வாரம்

தேசிய வாரத்தைச் சிந்திப்போம்—இந்தத்
தேசத்தின் தந்தையை வந்திப்போம்
மாசற்ற காந்தியின் நாமமே—என்றும்
மனிதர் குலத்துக்குச் சேமமாம்

சேவைகள் காரியம் வெல்லுமா—அன்றிச்
செல்வச் செருக்குகள் செல்லுமா
தேவை நமக்கின்று சேவைதான்—அது
தெய்வக் கருணையை மேவுமால்

சத்தியம் நம்மிற் குறைந்ததால்—பல
சங்கடம் வந்து நிறைந்ததே
பத்தியம் விட்டுப் பிரிந்திடில்—என்ன
பயனுள வாகும் மருந்துகள் ?

நீரில் குளித்திடும் ஆசையான்—சேற்றை
நிறையத்தன் மேனியில் பூசல்போல்
ஊரைத் திருத்திட எண்ணினோம்—சொந்த
ஊழல் மிகுந்திடப் பண்ணினோம்

ஒற்றுமை சேரப் புகுந்தவர்—தம்முள்
ஒருவரை ஒருவர் இகழ்ந்தனர்
குற்றம் நிறைந்தது நாட்டிலே—உண்ணக்
கூழும்கு றைந்தது வீட்டிலே

# 'ஜேய் ஹிந்த்'

'ஜேய் ஹிந்த்' என்கின்ற
    ஜீவ நன் ஞதம்
தேசத்தில் ஒற்றுமை
    சேர்க்கின்ற கீதம்
பேய்கொண்ட தென்ன
    நமைப்பிடித் தாட்டும்
பேத உணர்ச்சியை
    நாட்டை விட்டோட்டும் (ஜே)

அச்சத்தைப் போக்கி நல்
    ஆண்மையைப் போற்றி
அடிமைக் குணங்களை
    அடியோடு மாற்றி
துச்சம் உயிரெனத்
    தொண்டுகள் செய்ய
தூண்டிடும் சக்திகள்
    ஆண்டிடும் துய்ய (ஜே)

விடுதலை ஆர்வத்தில்
    வேகத்தை மூட்டி
வீரத் தனங்களில்
    ஆசையை ஊட்டி
துடிதுடிப் போடிந்தத்
    தேசத்தில் எங்கும்
சொல்லித் தராமலும்
    சொல்லி முழங்கும் (ஜே)

‘வந்தே மாதரம்’
பாடி வணங்கி
வாழ்த்தி நம் அன்னையின்
வெற்றி முழங்கி
‘தந்தோம் உன்றன்
சுதந்திரம்’ என்றே
தைரியம் சொல்வது
‘ஜேய் ஹிந்த்’ அன்றோ (ஜே)

வாலிபர் நெஞ்சின்
வசீகர மாரன்
வரையற்ற த்யாகி
சுபாஷ் சந்த்ர வீரன்
கோலிய சேனையின்
விடுதலை கோஷம்
குறையாது ‘ஜேய் ஹிந்த்’
மேலுள்ள பாசம் (ஜே)

# இலங்கை சுதந்திர கீதம்

வீரகேசரி என்னநின்று நம்
வெற்றியோசை முழக்குவோம்
விட்டொழிந்தது கெட்ட காலமும்
வீழ்ந்தழிந்தன தீமைகள்
தூரம் ஓடின சூதுவாதுகள்
சூழ்ந்திருந்தன யாவையும்
சூடுபட்டன கேடுகெட்டன
சூழ்ச்சி வஞ்சனை ஆட்சிகள்

கோரமாகிய அடிமை வாழ்வெனும்
கொடுமைதந்தன மடமைகள்
குற்றம்முற்றிலும் பற்றுவிட்டது
கூடிவிட்டது விடுதலை
ஈரம்மிக்க இலங்கைநாடினி
இன்பமோங்கி இலங்கவே
இன்றுதொட்டு சுதந்திரம் தரும்
இனியவாழ்வு துவக்கினோம்

ஏசுநாதனைப் புத்ததேவனை
ஏற்றமுள்ள மகம்மதை
இணையிலாதநம் காந்தி அண்ணலை
ஈன்றுமெய்ப்புகழ் ஏந்திடும்
ஆசியாவினில் பகுதியாகிய
அழகுசொட்டு மிலங்கையில்
ஆதிவந்தவர் பாதிவந்தவர்
யாவராயினும் இவ்விடம்

வாசமாயுள மக்கள்யாவரும்
நேசமாயினி வாழவே
வம்புதுன்புகள் வாதபேதமும்
வந்திடாவகை ஆளுவோம்
ஈசனுண்மையை எண்ணுபுண்ணிய
இந்தநாட்டு நினைப்புடன்
எதிரியென்றிட எவருமின்றியே
சுதந்திரக்கொடி ஏற்றுவோம்

மலைவளத்திலும் நதிவளத்திலும்
மரவளத்திலும் மிக்குளோம்
மதிவளர்த்தினி நிதிவளர்த்திடும்
மார்க்கம் முற்றிலும் தீர்க்கமாம்
கலைவளர்த்தொரு நிலைகொடுத்திடும்
கருணைவாழ்வு நடத்துவோம்
கடமைசெய்தபின் உரிமைஎய்திடும்
கதியறிந்த கருத்துடன்
கொலைவளர்த்திடும் மதவெறித்திமிர்
கொடுமை முற்றிலும் அற்றதாய்
குவலயத்தவர் கவலையற்றிடக்
கூடுமானதைச் செய்யவே
அலைகடல்நடு அரணமைந்துள
அழகுகொஞ்சு மிலங்கையில்
அச்சமற்ற சுதந்திரத்துடன்
ஆண்மையோடர சாளுவோம்

சேரசோழரின் பாண்டிமன்னரின்
செந்தமிழ்த்திரு நாட்டுடன்
சேர்ந்திருந்திட நேர்ந்திடும்படி
செய்துவைத்தது தெய்வமே

திரயோசனை செய்யிலிந்நம்
 தீவின்நன்மைகள் யாவையும்
திட்டமாகவும் ஒட்டிநிற்பது
 தேவிஇந்தியத் தாயுடன்
தூரமாகிய தேசமக்களின்
 தொடர்புவேண்டிய தென்னினும்
தொன்றுதொட்டுளம் ஒன்றுபட்டுள
 தொலைவிலாத சரித்திரம்
வாரம்மிக்குள இந்தியாவுடன்
 நாரம்மிக்குள நட்புடன்
வந்தஇந்த சுதந்திரத்தினை
 எந்தநாளிலும் வாழ்த்துவோம்

புத்ததேவரின் போதநன்னெறி
 போற்றும்சிங்கள மக்களும்
பூரணத்தமிழ் ஞானமென்பதைப்
 பூசைசெய்திடும் தமிழரும்
ஒத்துவாழ்வது மெத்தவும்சுல
 பத்திலாவது உண்மையால்
உன்னவேறினி என்னவேற்றுமை ?
 ஒன்றுமேயிலை என்னலாம்
சத்தியத்தினும் சாத்விகத்தினும்
 சாரமாகிய காந்தியின்
சமரசத்தனி சங்கநாதம்
 முழக்குகின்றஇச் சமயமே
யுத்தமென்கிற பித்தைவெட்டிட
 உலகினுக்கொரு உதவியாய்
ஊழியம்செய ஈழநாடுதன்
 உரிமைபெற்றதை வாழ்த்துவோம்.

# ஆயுத பலத்தை நம்பாதே

ஆயுத பலங்களை நம்பாதே
ஐரோப் பியர்போல் வெம்பாதே
ஞாயமும் அன்பும் நமது துணை
நமக்கார் உலகில் வேறு இணை

எந்திர சக்திகள் ஏய்த்துவிடும்
எய்தவர் தமையும் மாய்த்துவிடும்
தந்திர யுக்தியும் சதமல்ல
தாரணி மதிப்பது அதையல்ல

சாகிற துணிச்சல் போதாது
சற்குணம் இல்லையேல் தீதாகும்
வேகிற நெருப்பால் சமைத்திடலாம்
வெறுந்தணல் உணவாய் அமைந்திடுமோ

தைரியம் எத்துணை இருந்தாலும்
தர்மமும் கருணையும் பொருந்தாமல்
செய்கிறதெல்லாம் சிறுமை தரும்
செம்மையும் நன்மையும் வறுமையுறும்

வீரரும் சேனையும் வேண்டியதே
வெல்லவும் கொல்லவும் தூண்டிடவா !
ஈரமும் இரக்கமும் கெடுத்தவரை
இடித்துரைத் தறவழி நடத்திடவே

விஞ்ஞானத்தால் கொல்லுவதை
வீரர்கள் போரெனச் சொல்லுவதோ
அஞ்ஞானத்தின் வடிவன்றோ
அணுகுண்டாகிய வெடிகுண்டு

கண்டுபிடித்தவர் நடுங்குகிறார்
காணாதவர்கள் ஒடுங்குகிறார்
மண்டலத் தறிஞர்கள் மயங்குகிறார்
மறைத்திட முயற்சியில் தியங்குகிறார்

கொல்லும் வித்தைகள் பெருகுவதா!
கொஞ்சிடும் வாழ்வினி அருகுவதா!
சொல்லும் வல்லவர் சொல்லுங்கள்
சுதந்திரம் இதற்கா சொல்லுங்கள்

இதுதான் தருணம் அடுத்துளது
இம்சையின் தீமையை எடுத்துரைக்க
பொதுவாய் உலகினில் போர்வெறியை
போக்கிடப் புகல்வோம் ஓர் நெறியை

உத்தமன் காந்திசொல் கடைப்பிடித்தால்
உண்மையில் போர்களைத் தடைப்படுத்தும்
சத்தியம் சாந்தமும் வளராமல்
சண்டையின் மோகமும் தளராது

இந்திய மக்களின் பொதுச்சிறப்பாம்
இம்சை வழிகளில் அதிவெறுப்பே.
வந்தனை புரிவது வாய்மைகளை
வணங்குதல் வாழ்க்கையின் தூய்மையரை

கொலைவழி மறுப்பவர் தமிழ்மக்கள்
கொள்கையில் சிறப்பவர் தமிழ் மக்கள்
நிலைதரும் வள்ளுவன் மொழிகற்போர்
நிச்சயம் காந்தியின் வழிநிற்பார்

# புரட்சி வேண்டும்

புரட்சி வேண்டும் புரட்சி வேண்டும்
புரட்சி வேண்டுமடா !
புரட்சி என்கிற சொல்லின் பொருளிலும்
புரட்சி வேண்டுமடா !

புத்தம் புதிதென நத்தப்படுவதைப்
புரட்சி என்றிடலாம்
நித்தம் கண்டுள சொத்தை வழிகளில்
புரட்சி நின்றிடுமோ !

மருட்சி தந்திடும் முரட்டு வார்த்தையில்
புரட்சி வந்திடுமோ ?
திரட்சியாகிய மகிழ்ச்சி வாழ்க்கையைத்
தீயன தந்திடுமோ !

பொதுநலம் வந்திடப் புதுவழி தந்தால்
புரட்சி அதுவாகும்
சதிபல செய்திடும் வதிகளில் விழுவதும்
புரட்சி மதியாமோ ?

வேதனை யேதரும் தீதுள நெறிபல
புரண்டு வீழ்ந்திடும் ஓர்
போதனை தந்திடும் நூதன வழிகளில்
புரட்சி சூழ்ந்திடுவோம்

சூதுகள் அரசியல் நீதிகள் என்றிடும்
சுத்தப் பொய் யுரையை
வீதியில் சந்தியில் விழிக்க விட்டொரு
புரட்சி செய்திடுவோம்

# பூமிதான யக்ஞம்

பூமிதானம் செய்வதே
புண்ணியத்திற் புண்ணியம்,
புனிதமான முறையில் நாட்டின்
வறுமை போகப் பண்ணிடும்;
சாமிசாட்சி யாகஎங்கும்
சண்டைகள் குறைந்திடும்;
சரி நிகர் சமான வாழ்வு
சத்தியம் நிறைந்திடும்.

ஏழையென்றும் செல்வனென்றும்
ஏற்றத்தாழ்வு போய்விடும்;
எங்கும் யாரும் பகைமை யின்றிப்
பங்கு கொள்வ தாய்விடும்;
கோழையின் பொறுமை தூண்டும்
குற்றம் யாவும் நீங்கிடும்;
கொடுமையான பஞ்சம்விட்டுக்
குண நலங்கள் ஓங்கிடும்.

உடலுழைத்து உணவு முற்றும்
உண்டு பண்ணும் உழவர்கள்
உரிமை சொல்ல நிலமிலாமல்
உள்ளம் வெந்து அழுவதா?
உடல் சுகித்து உலகினுக்கு
உதவியற்ற ஒருசிலர்
ஊரிலுள்ள பூமிமுற்றும்
உரிமை கொண்டு திரிவதா?

உலகிலுள்ள நிலமனைத்தும்
உலகநாதன் உடைமையே;
ஊரிலுள்ள விளை நிலங்கள்
ஊர்ப் பொதுவாம் கடமையே.
கலகமின்றிச் சட்ட திட்டக்
கட்டுப்பாடும் இன்றியே
கவலையற்ற சமரசத்தின்
காட்சி காண நன்றிதே

காந்தி தர்ம நெறியைக் காக்கக்
கடவுளிட்ட கட்டளை
கருணையோடு பூமி தானம்
செய்யக் கோரும் திட்டமே;
ஆய்ந்து பார்க்கின் உலகிலெங்கும்
அமைதியற்ற காரணம்
அவரவர்க்கு நிலமிலாத
ஆத்திரத்தின் பேரில்தான்

தான தர்ம ஆசையேநம்
தமிழகத்தின் கல்வியாம்
தந்துவக்கும் இன்பமே நம்
தலை சிறந்த செல்வமாம்
தீனருக்குப் பூமிகொஞ்சம்
தானமாகத் தருவதால்
தேசமெங்கும் அமைதிபெற்றுத்
திருவிலாசம் பெருகுமே

கும்பிவேகும் பசிமிகுந்த
கோபதாபம் என்னவே
கொடுமைசேர் புரட்சி வந்து
கொள்ளைபோகு முன்னமே

அன்பினோடு பூமிதானம்
ஆனமட்டும் செய்வதே
அச்சமின்றி நாட்டிலெங்கும்
அமைதி பெற்று உய்வதாம்

விளைவு முற்றும் சொந்தமாகும்
விளை நிலங்கள் தந்திடில்
வேலையற்ற கோடி மக்கள்
விளைச்சல் செய்ய முந்துவார்

களை விழுந்து தரிசு பட்ட
கோடி கோடி காணிகள்
களி சிறக்கச் செழுமை பெற்றுக்
கதிர்கள் முற்றும் காணலாம்

காந்தி சொன்ன ராம ராஜ்யம்
காணவல்ல தலைவனாய்
கர்ம, பக்தி, ஞானயோகம்
கருதும் புத்தி நிலையனாய்
சாந்த சத்தி யாக்ரகத்தின்
சாட்சியாம் வினோபா
சாற்றுகின்ற பூமிதானம்
சோற்றுப் பஞ்சம் மாற்றுமே

விரதமாகக் காந்தி யண்ணல்
விட்டுப் போன வேலையை
விட்டிடாமல் கட்டிக் காக்கும்
வீறு கொண்ட சீலனால்
பரத நாட்டின் தர்ம சக்தி
பாரிலெங்கும் சூழவே
பகையிலாமல் யுத்தமென்ற
பயமிலாமல் வாழலாம்

தெய்வ ஜோதி காந்தி யண்ணல்
தேர்ந்தெடுத்த சீடனும்
திருவினோப பாவேநமது
தேச நன்மை நாடினுர்
வையமெங்கும் பெருமை பெற்ற
வண்மை மிக்கத் தமிழகம்
வந்து பூமி தானம் வாங்க
வரவு சொல்லி வாழ்த்துவோம்

கருணை வாழ்வின் அருணனை
காந்தி சீடன் வருகிருர்
கால்நடந்து ஊர்கள் தோறும்
கைகுவிக்கப் பெறுகிருர்
தருணமீது தமிழகத்தின்
தனிமையாகும் வண்மையைத்
தாங்கிப் பூமி தான மீந்து
தர்ம வேள்வி பண்ணுவோம்

வாழ்க வாழ்க காந்தி நாமம்
என்றும் நின்று வாழ்கவே
வந்துதித்த நம் விநோப
வாய்மையாளன் வாழ்கவே
வாழ்க பூமி தானம் செய்யும்
வண்மைபோற்றும் யாவரும்
வாழ்கசாந்த சத்தியத்தில்
வந்த நம் சுதந்திரம்

# எது வேண்டும்?

எது உனக்கு வேண்டுமென்று
எண்ணிப் பார்த்துச் சொல்லடா!
மதி மிகுந்த மனித ஜன்ம
மகிமை காத்து நில்லடா!

ஞானமுள்ள நாடிதென்று
பேர் நிலைத்தல் வேண்டுமா?
சேனைகொண்டு சென்று கொன்று
சீர் குலைத்தல் வேண்டுமா?

தந்திரத்தை வெல்லும் தூய்மை
தாங்கி நிற்க வேண்டுமா?
எந்திரத்தின் அடிமையாகி
ஏங்கி நிற்க வேண்டுமா?

அறிவுகொண்டு மக்களுக்கு
அன்பு செய்தல் வேண்டுமா?
செறிவு கொண்ட சக்திபெற்றுச்
சேதம்செய்தல் வேண்டுமா?

வெள்ளையாகத் தீமையை
எதிர்த்து வெல்ல வேண்டுமா?
கள்ளமாய் மறைந்து செய்யும்
காரியங்கள் வேண்டுமா?

அன்புசொல்லித் தீமையை
அடக்கியாள வேண்டுமா?
வம்பு பேசித் தீமையை
வளர்த்து வைக்க வேண்டுமா?

சத்தியத்தின் பற்றுகொண்ட
சாந்த வாழ்வு வேண்டுமா ?
மற்றசெய்து மனிதமேன்மை
மாய்ந்து போகவேண்டுமா ?

தீரமாகப் பொறுமை காட்டும்
திறமடுக்க வேண்டுமா ?
வீரமென்று கோபமூட்டும்
வெறிபிடிக்க வேண்டுமா ?

ஆசையற்ற சேவைசெய்யும்
நேசவேலை வேண்டுமா ?
தேசபக்தி மாசுகொள்ளும்
நாசவேலை வேண்டுமா ?

தெய்வம் உண்டு என்று நம்பும்
தேசபக்தி வேண்டுமா ?
பொய்யும் போரும் புனிதமென்று
பேசும்புத்தி வேண்டுமா ?

வலியப் பூமி தானம் செய்து
வாழ்த்துகொள்ள வேண்டுமா ?
வலிமை வந்து நம்மைத்தாக்கி
வீழ்த்திக்கொல்ல வேண்டுமா ?

# யார் தொண்டன்

தொண்டு செய்யக் கற்றவன்
துயரம் போக்கும் உற்றவன்
சண்டை போடும் மக்களை
சரசமாக்கி வைக்கவே (தொ)

தீரவாழ்வு சொல்லுவான்
தீமையாவும் வெல்லுவான்
ஈரமற்ற செய்கைகள்
வீரமென்றல் பொய்யென (தொ)

சேவை செய்யும் நல்லவன்
செம்மை கண்ட வல்லவன்
தேவையுள்ள யாரையும்
தேடிச் சென்று சேருவான் (தொ

அன்பினைப் பெருக்குவான்
ஆசையைச் சுருக்குவான்
துன்பமுற்ற எவரொடும்
துணையிருக்கத் தவறிடான் (தொ)

பணிவுமிக்க தொண்டனே
பரமஞானம் கண்டவன்
தணிவுமிக்க சொல்லினால்
தரணிஎங்கும் வெல்லுவான் (தொ)

கூவிடாமல் ஓடுவான்
குறைகள் தீர்க்க நாடுவான்
ஏவிடாத தொண்டனே
எதிலும் வெற்றி கொண்டவன் (தொ)

கடவுளென்ற சக்தியைக்
கருதிடாத பித்தரின்
மடமை நீக்கும் சேவைதான்
மனிதர்க்கின்று தேவையாம் (தொ)

பூமி தான போதகன்
பூஜிதன் விநோபா
புதுமைமிக்க தொண்டுதான்
போற்றவேண்டும் இன்றுநாம். (தொ)

# விண்ணிலிருந்து அண்ணல் வருகை

ஞானமென்று சொல்லு கின்ற
நல்ல சக்தி யாவையும்
நானிலத்தில் காந்தியென்று
மேனிபெற்று வந்தது
ஈனமிக்க அடிமை வாழ்வின்
இடர்மிகுந்து நொந்தநம்
இந்தியாவின் விடுதலைக்கு
விந்தைமிக்க நன்னெறி
தான்நடந்து வெற்றிதந்து
தரணிமுற்றும் வாழ்ந்திட
தனது சொந்த உடலைக்கூட
தத்தமாகத் தந்துபின்
வானகத் திருந்து நம்மை
வாழ்த்தும் காந்தி தேவதை
வையகத்தில் மீண்டும் நம்மை
வந்துபார்க்கும் நாள்இது

தெய்வமேனி யோடுகாந்தி
திகழநம்முன் நிற்கிறார்
திருவடிக்கு மாலைசூட்டி
த்யானபூசை செய்குவோம்
வையம்வாழ நல்வரங்கள்
வாங்கிக்கொள்ள நல்லநாள்
வஞ்சமற்ற நெஞ்சினோடு
அஞ்சலித்து நின்றுநாம்

ஐயன்காந்தி காட்டுகின்ற
அன்புவாய்மை போற்றினுல்
அச்சமேது? பிச்சைகேட்கும்
அவதிஏது அவனியில்?
உய்யவேறு மார்க்கமில்லை
காந்திபக்தி ஒன்றுதான்
உலகில்இன்று குமுறுகின்ற
கலகம்தீர நன்றுகாண்

உணவிலாது ஏழைமக்கள்
உடல்பதைத்து வாடலும்
உணர்விலாத தன்னலங்கள்
பதுக்கிவைத்து மூடலும்
குணமிலாத செல்வம் செய்யும்
கோடி கோடி துன்பமும்
கொடுமைசெய்து உலகைஆளக்
கோருகின்ற வம்புகள்
பணமிலாத ஒன்றுக்காகப்
பாதகங்கள் புரிவதும்
பாவபுண்ணியங்களென்ற
பயமிலாது திரிவதும்
அணுபிளக்கும் குண்டுசெய்து
அகிலநாசம் எண்ணலும்
அத்தனைக்கும் மாற்றுநல்கும்
அமரன்காந்தி அண்ணல்தான்.

# காந்தி சொல்லை ஏந்தி நிற்போம்!

அடிமைத் தனத்தை விட்டோம்—ஆனால்
அன்பை மறந்து கெட்டோம்
மடமைத் தனத்தை வென்றோம்—ஆனால்
மமதை நிறைந்து நின்றோம்
கொடுமை எதிர்த்து வந்தோம்—இன்று
கொள்கை உதிர்த்து நொந்தோம்
உடைமை அடையப் பெற்றோம்—ஆனால்
உண்மைப் பிடிகள் அற்றோம்!

பதவியை ஏசிவந்தோம்—இன்று
பதவிக்கே ஆசை தந்தோம்
உதவிகள் தேடிச் செய்தோம்—இன்று
உதவியை நாடி வைதோம்
மதவெறி தீமை என்றோம்—நாமும்
மாறிப் பொறுமை கொண்டோம்
இதுவும் சுதந்திரமா?—இது
என்ன இதந் தருமோ?

ஒற்றுமை வேண்டும் என்றோம்—இன்று
உறவறத் தூண்டு கின்றோம்
வெற்றுரை விட்டு ழைத்தோம்—இன்று
வேற்றுமை பட்டி ளைத்தோம்
பெற்ற சுதந் திரத்தை—நாம்
பேணி இதம் பெறத்தான்
நற்றவன் காந்தி சொல்லே—எந்த
நாளிலும் ஏந்தி நிற்போம்!

# வாக்குமூலம்

[மகாத்மா காந்தி, விசாரணையின்போது
நீதிமன்றத்தில் கூறியதின் சாரம்]

ஆங்கில அரசியல் அதுமிக நல்லது
ஈங்கதற் கொன்றும் இணையிலை யென்று
எண்ணியே இருந்த என்மன முடைந்து
மண்ணிலே அதுமிக மயக்குடைத் தென்று
கண்ணிய முடையோர் கலந்திடார் அதிலென
திண்ணமாய் நம்பித் திரும்பிய காரணம்
ஈங்குள யாவரும் இந்திய ரனைவரும்
ஆங்கில மக்களும் அரசியல் அதிபதி
தாங்களும் அறிய ஸத்தியம் தெரிய
ஓங்கிய கடமையில் உரைத்திட நின்றேன்.
ஆதிநாள் தெற்கு ஆப்பிரிக் காவில்
நீதியும் எங்கள் நிலைமையும் கண்டேன்
இந்திய னாகவே இருந்தத னாலே
சொந்தமென் றுரிமை சொல்லுதற் கொன்றும்
இந்தமா உலகில் எமக்கிலை யென்பதை
அங்குதான் முதலில் அறிந்திட நேர்ந்தது
என்கிற போதும் ஏகாதி பத்யம்
போய்விடும் போலப் போரில் எதிர்த்த
போயர் சமரிலும் ஜுலுவர் போரிலும்
அந்தநா டாளும் ஆங்கி லேயருக்கு
எந்தன லான உதவிகள் புரிந்தேன்.
சொற்பொரு ளுடலும் சோர்விலா துதவி
பற்பல விதமாய் பட்டமும் பரிசும்
ஏட்டினிற்கூட என்னைப் புகழ்ந்து

காட்டியே எழுதும் கனதையும் பெற்றேன்.
ஜெர்மனி சண்டை செய்திடும் போதும்
தர்மம் இதுவெனத் தளரா துழைத்தேன்.
ஆனஎன் தேகம் அசதியுற் றிருந்தும்
சேனையும் பணமும் சேர்த்துக் கொடுத்தேன்.
சண்டையின் பின்பு தருமம் தழைக்கும்
அண்டிய எங்கள் ஆரிய நாடும்
மானிலத் துள்ள மற்றநா டுகளென
தானிமிர்ந் துயர தயவுசெய் வாரென
நம்பியே நானும் நாளும் உழைத்து
வெம்பினேன் எண்ணமும் வீணுய்ப் போனதே.
அடிமேல் அடியென அஞ்சியே பதைத்திட
இடிமேல் இடிவிழ இற்றது நெஞ்சமும்
முதலடி ரௌலட் சட்ட மூலமாய்
முதுகினில் விழுந்தது சுதந்தரம் முறிய
பதைத்துநா னெழுந்து பலவிதத் தாலும்
அதைத்தடுப் பதற்கே அலைந்திடும் நாளில்
தயங்கிய என்மனம் தைரிய மடையுமுன்
பயங்கர மாகிய பஞ்சாப் படுகொலை
கூர்மையாம் இடியது மானமுங் குறைய
மார்பினில் விழவே மயங்கினன் ஐயோ.
இந்திய முசல்மான் மக்களுக் கென்று
மந்திரி யுரைத்த உறுதியை மறந்து
அன்னவர் குருவின் ஆதிபீடமாம்
மன்னிய கிலாபத் மதவிஷ யத்திலும்
சொன்னதம் வாக்கினைச் சோரவிட் டார்கள்
எண்ணமும் இல்லை யென்பதை யுணர்ந்தேன்.
இத்தனைக் கொடுமைகள் இழைத்தனர் தெரிந்தும்

சித்தமும் அவர்க்குச் சீக்கிரம் திரும்புமென்
ருசையே கொண்டு அடக்கினேன் துக்கமே
ஏசிய என்னை எதிர்த்தவ ராகி
எச்சரித் திட்ட என்னுடை நண்பர்கள்
உச்சரித் திட்ட உரைகளை விடுத்து
இந்தியர் குறைகளை எடுத்துரைத் திடவென
வந்திடும் பெரிய வாக்குடை காங்ரஸில்
அத்தினம் நானும் அமிர்த சரசினில்
ஒத்துழைப் பதையே உறுதியாய்க் கொண்டு
தாங்கியே நின்றேன் தருமந் தானென
ஏங்கினேன் ஐயோ ஏமாந் தவனாய்
மகம்மதி யர்க்குரை வார்த்தையும் பொய்த்தது
தகுமென பஞ்சாப் தருக ணாளரை
அடிப்பது போலும் அழுவது போலும்
நடிப்பினைச் செய்து ஞாயமும் மழுப்பி
தீங்கிழைத் தவர்க்கு உதவிசம் பளமும்
பாங்குடன் கொடுத்துப் பரிசுகள் அளித்தார்
இதையெலாங் கண்டபின் இந்தியர்க் களித்த
உதவாக் கரையாம் சீர்திருத் தங்களும்
என்னுடை நாடு இன்னமுங் குறைந்து
குன்னிட வென்றே கொடுத்தனர் என்று
கண்டனன் நானும் கருத்திழந் தவனாய்
பண்டைய இந்தப் பாரத நாட்டிடம்
அரசியல் செய்பவர்க் கன்பிலை யென்றும்
உரிமையெம் பணத்தை உறிஞ்சிட வென்றே
அறிந்திட நின்றேன் ஆங்கில ஆட்சியில்
சிறந்தஎன் தேசம் சீர்குலைந் ததுவே
அன்றியும் இந்த ஆட்சியின் முன்னால்

ஒன்றிய சுகங்கள் உயர்ந்தஇந் நாட்டில்
மனைதொறும் இருந்து மானங் காத்ததாம்
நினைவரி தாகிய ராட்டினத் தொழிலை
அழித்தனர் முற்றும் அறிந்தே யென்று
எழுதினர் தெரிந்த இங்கிலீஷ் காரரே.
காரண மிதனால் கணக்கிலா ஜனங்கள்
சோறுண வழியும் துணியுமில் லாமல்
நடைபிணம் போல நாள்கழிப் பதனை
தடைசொல யார்க்கும் தைரியம் வருமோ ?
பட்டணக் கரையில் பகட்டியே யலைந்து
சட்டவட் டம்பல ஜம்பமாய்ப் பேசி
வீடுகள் கட்டியே விளக்குகள் ஏற்றி
பாடு படாமலே பசப்பியே வாழ்ந்து
நாட்டுப் புறங்களில் நலிந்திடும் ஏழைகள்
பாட்டைப் பிடுங்கியே பிறருடன் கூடி
பங்குகொண் டுண்ணும் பாபமாம் வாழ்க்கையை
தங்கிட எண்ணார் தரகராய் வாழ்வார்.
ஏழையின் பணத்தை எளிதினிற் பறிக்கவே
ஆளுமிந் நாட்டின் ஆட்சியின் முறைமை
உதவியாய் நிற்பதென் றுணரார் அவரும்
உதவியாய் நிற்பதால் உண்மையை அறியார்.
வித்தைகள் ஜாலமும் வேணது செய்து
எத்தனைக் கணக்குகள் எடுத்துரைத் தாலும்
உண்மையாம் இதனை ஒளித்திட முடியுமோ
திண்மையாய் நானும் செப்புவ துண்டு
உலகக் கதைகளில் உவமையொன் றில்லா
பலமிகு மிகப்பெரும் பாவத் திற்கே
ஈசனென் றொருவன் இருப்பது உண்மையேல்

மாசிலா அவனுடைட சன்னதி மன்றினில்
ஆங்கில தேசமும் அதனுடன் எண்ணிய
பாங்கின ராகிய இந்தியர் பலரும்
உத்தரம் சொல்ல ஒதுங்கிடும் காலம்
ஸத்தியம் ஒருநாள் வந்திடும் ஸத்தியம்.
பற்பல விதமாய்ப் பார்த்துப் பார்த்து
அற்புத உண்மையை அறிந்தனன் நானும்
அறிந்தோ அன்றோ அன்னியர் தமக்கே
பரிந்தே நிற்கும் பகருமிவ் வாட்சியை
நல்லதே யென்று நம்பின ராகி
நல்லதோர் துரைகளும் நாட்டினர் பலரும்
மயங்கியே நிற்கும் மகிமையே மகிமை
முயங்கியே அவர்கள் செய்திடும் முறையில்
ஆண்மையை யிழந்து அழுந்திடும் தேசம்
பான்மையை உணரார் பாவமும் அறியார்
ஆதலா லிந்த அரசியல் மாற
தீதிலா வழியில் திரும்பினேன் உழைக்க
அரசியல் செலுத்தும் அதிகா ரிகளாம்
ஒருவ ரிடத்தும்நான் உள்ளம் கசந்திலன்
மன்னவ னிடத்துள மதிப்பிலும் குறையேன்
என்னினும் இந்த இயல்பிலா முறைமை
இதுவரைக் கண்ட எல்லா முறையிலும்
இதுமிகக் கெடுதிகள் இழைத்துள தென்று
நம்பியே அதனுடன் நான்பிணக் குற்று
அன்புகாட் டுவதே அக்ரம மென்று
இந்தியா விற்கும் இங்கிலாந் திற்கும்
சந்ததம் நன்மையை நாடியே நானும்
ஒத்துழை யாமையே உயர்ந்த வழியென

இத்தரை யெல்லாம் இயம்பினேன் அறிய,
கடமையை யுணரும் ஒவ்வொரு குடியும்
திடமுடன் கொண்டு செய்திட வென்றும்
சட்டப் படிக்குத் தவறெனத் தெரிந்தும்
திட்டமாய் நானும் தெரிந்தே செய்தேன்
ஆகையால் துரையே அறைகுவன் முடிவாய்
ஆகிய இந்த அரசியல் முறைமை
சரியல வென்றும் ஸத்தியத் தில்நான்
நிரப ராதியே என்பதும் நினைத்தால்
ஒருவழி ஒன்றே உங்களுக் குண்டு.
மருமிகும் இந்த மார்க்கத் திருப்பது
சாலவும் தவறெனத் தகுதியி லுணர்ந்தால்
வேலையை விட்டு விலகிடல் வேண்டும்
அன்றேல் இந்த அரசியல் முறைமை
நன்றே நானும் நாட்டிற் கிடைஞ்சல்
செய்தவ னென்றே தெளிந்திடு வீரேல்
நொய்தில் விடாமல் நூலில் இதற்குள
தண்டனை முழுவதும் தந்திடல் வேணும்
கொண்ட இந் நாட்டின் குறைதவிர்ந் திடவே.

# சுதந்திரப் பொங்கல்

அடிமை விலங்குகள் அகன்றன இனிமேல்
கொடுமை பிறர்பால் கூறுதற் கில்லை
திடமுடன் சத்தியத் தீயினை மூட்டி
மடமை மதவெறி மமதையை எரித்து
பொய்யும் மோசமும் புலையும் பொசுங்க
வையம் முழுவதும் வாழ்ந்திடத் துணிந்து
அன்பெனும் பாலை அடுப்பகத் தேற்றித்
துன்பெனும் துர்நீர் சுண்டித் தொலைந்திடக்
காய்ச்சித் திரட்டிய கருணைப் பொங்கல்
பாய்ச்சும் சுதந்திரப் பரிமளம் கமழ
அமிழ்தம் இதுவென அழியா வரந்தரும்
தமிழன் தெய்விகத் தனிரசம் சேர்த்து
புத்தம் புதியதோர் சுவைதரப் புசித்து
நித்தமும் மகிழ்வுடன் நெடுநாள் வாழ்வீர் !

# பொது



# ராம ராஜ்யம்

ஏ ! ராம ராமவென ஜெபிப்போரெல்லாம்
ஏமனெனும் பயம் அணுகா இன்பம் சூழ்வார்
மா ராமன் திருப்புகழைச் சொல்வோ ரெல்லாம்
மாருதிபோல் அவனருளின் மகிழ்ச்சி ஆள்வார்
ஸ்ரீ ராமன் சீதைகதை கேட்போரெல்லாம்
ஸ்ரீதேவி வாசமுறத் திகழ்ந்து வாழ்வார்
ஆ ! ராமன் பெயரைஅவ மதிப்போர்தம்மை
அக்காளே எக்காலும் ஆட்சிகொள்வாள்

இமயமுதல் தென்கோடி இலங்கைஈருய்
இருந்தவர்கள் எல்லாரும் என்றும் கேட்டு
சமயமொழி வேற்றுமையின் தடைகள் தாண்டி
சமரசமாய் ஒரு குலமாய் சல்லாபித்த
அமுதமெனும் ராமகதை அறிவைப்போற்றி
அன்னியரும் தலைவணங்கி ஆதரித்தார்
நமதுமனம் அதைமறந்த நடத்தையாலோ
நாம் இன்று நலங்குன்றி நலிந்துபோனோம்

வீடுதொறும் சீதைஒளி விளங்கவேண்டும்
வீதிதொறும் ராமகதை முழங்கவேண்டும்
நாடுமுற்றும் அனுமன்வழி நாடவேண்டும்
நற்றவசி பரதனையே பாடவேண்டும்
கேடுதரும் காமமெனும் உண்மைகேட்டு
கேண்மைமிகும் ஆண்மையெனும் கிளர்ச்சிகொண்டால்
பாடுபெறும் காந்திமகான் பரிந்துசொன்ன
பதவிவரும் பார்அதுதான் ராமராஜ்யம்.

# காதலே கடவுள்

விடிதல் என்று சொலும் காலம்—கீழ்
வெளிச்சம் காணுவது போலும்
அடவிஎன்ற சொல்லாலே—மர
அடர்த்தி தோன்றுவது போலே
புடவை என்று சொலும் போது—மனம்
புகுந்து நிற்கும் ஒரு மாது
கடவுள் என்ற பெயர் சொன்னால்—அதில்
காதல் சக்தி வரும் முன்னால்

காதல் இன்றி உலகில்லை—இதைக்
கண்டுகொள்ள ஏன் தொல்லை
தீது செய்துழலும் காமம்—காதல்
தெய்வசக்தி தரும் நாமம்
வாது பேசுவது மடமை—அதன்
வாய்மை கண்டறிதல் கடமை
ஏது துன்பம் துய ரேனும்—காதல்
இசைந்த எல்லைவர நாணும்

கணுவினோடு கணுக்காதல்—ஒரு
கரும்பு நல்ல சுவை ஆதல்
கணவனோடு பெண் காதல்—வீடு
கலகமற்ற தென ஓதல்
அணுவினோடு அணுக்காதல்—தானிவ்
வகில லோகநிலை ஆதல்
பணிவினோடு அதைப் பார்க்கின்—அதில்
பரமன் அருள் விளங்கும் யார்க்கும்

# தென்றல்

தென்றல் குலவிவரும்—நல்ல
தென்மொழி தேனைத்தரும்
நன்றுள சேதிகளே—சொல்ல
நம்மிடைத் தூதுவரும்

உள்ளம் கிளர்ச்சி பெறும்—படி
உடலம் குளிர்ச்சி யுறும்
கள்ளமனக் குறும்பும்—சற்று
கவலையறத் திரும்பும்

காதலைக் கொண்டுவரும்—இன்பக்
கலைகளை மொண்டு தரும்.
நோதலைப் போக்கிவிடும்—நம்மை
நூதனம் ஆக்கிவிடும்

வேகங்கள் மாறிவிடும்—ஏதும்
வெஞ்சினம் ஆறிவிடும்
தாகம் தணிந்தது போல்—உள்ளம்
தண்மை அணிந்திடுமே

நற்குணம் பேசிவரும்—ஞான
நறுமணம் வீசி வரும்
பற்பல நாட்டவரின்—உயர்
பண்புகள் கூட்டி வரும்

பகைமை மறந்திடவும்—அன்பின்
பற்று நிறைந்திடவும்
தகைமை மிகுந்ததுவாம்—தென்றல்
தன்னை உகந்திடுவோம்

கவிதை நிறைந்துளதாய்—ஆழக்
கல்வி சிறந்ததுவாய்
செவியில் முணுமுணுக்கும்—அதில்
செம்மை கிணுகிணுக்கும்

நாடுகள் சுற்றுவதால்—பல
நல்லன கற்றுவரும்
கேடுள வண்டல்களை—விட்டுக்
கேண்மையைக் கொண்டு வரும்

மானிட வர்க்கமெலாம்—ஒரு
மாதாவின் மக்களென்ற
ஞான உபதேசம்—தென்றல்
நம்மிடை யேபேசும்

என்றும் இருந்துலவி—புவி
எங்கும் திரிந்திடலால்
தென்றல் வருந்தோறும் —நம்முள்
தெய்வ நினைப்பூறும்.

# இளமை

கற்பனை மிகுந்தது இளைஞர் மனம்
கவிதைக் குகந்தது இளைஞர் மனம்
அற்புத உணர்ச்சிகள் அலை புரளும்
ஆனந்தம் வாலிப நிலைதருமே

துள்ளி மகிழ்வது இளம் பருவம்
துடிதுடிப் புடையது இளம் பருவம்
அள்ளித் தருவது அதன் பெருமை
ஆர்வமும் ஆற்றலும் அதன் உரிமை

இன்பம் குளிப்பது இளம் பருவம்
ஈகையிற் களிப்பது இளம் பருவம்
துன்பம் நேரினும் மலைக்காது
துக்கம் அதனிடை நிலைக்காது

வளர்ச்சியைத் தரிப்பது வாலிபமாம்
வல்லமை வரிப்பது வாலிபமாம்
தளர்ச்சியை மறப்பது வாலிபமே
தைரியம் சிறப்பது வாலிபமே

கஞ்சத் தனங்களை அறியாது
காசு பணம்தர மறையாது
தஞ்சம் உதவிடத் தாவிவரும்
தருணம் வாய்த்திடில் ஆவி தரும்

சோம்பலை ஒழித்தது வாலிபமாம்
சோர்வினைப் பழித்தது வாலிபமாம்
நோன்பென நித்தமும் நூல் படிக்கும்
நுண்ணறி வாகிய பால் குடிக்கும்

புதுமையை விரும்புதல் அதன் உடைமை
புரட்சிகள் அரும்புதல் அதனிடையே
முதுமையின் பெருமையை எள்ளாது
மூடப் பழக்கமும் கொள்ளாது

கேலியும் சிரிப்பும் பரபரப்பும்
கிளர்ச்சியும் காரியத் துருதுருப்பும்
வாலிப உள்ளம், வாடாமல்
வாழ்ந்திடும் நாடே நாடாகும்

மாணவ இளைஞரின் சிறந்த தனம்
மாசுகள் படியாக் குழந்தை மனம்
ஆணவம் புகுந்ததைக் கெடுக்காமல்
ஆண்டவன் அருளை வேண்டிடுவோம்.

# வன மகோத்ஸவம்

வனமகோத்ஸவ வைபவத்தினை
        வான்மகிழ்ந்திட வாழ்த்துவோம்
ஜனமகோத்ஸவ மாகவேயிதை
        தமிழகத்தினில் எங்கணும்
மனமகோத்ஸவ மங்களத்துடன்
        மக்கள் யாவரும் செய்திடில்
தினமஹோத்ஸவ இன்பமெய்திடத்
        திங்கள் மும்மழை பெய்திடும்

மரமடர்ந்துள வனமிருப்பதன்
        மகிமைசொல்லவும் கூடுமோ
வர மடைந்தென வளமை யாவையும்
        வலிய நம்மிடை நாடுமே
திரமறிந்திதன் தெய்வசக்தியை
        தேசம் முற்றிலும் ஓதினல்
உரம் மிகுந்திடும் பயிர்செழித்திடும்
        உணவிலாக்குறை ஏதினி?

கடவுள் ஆணையை மீறுகின்ற நம்
        கபட நாடக வாழ்வினல்
அடவி தந்திடும் பசுமை முற்றிலும்
        அழிவு செய்துள தாழ்வினல்
கடுமையாகிய பஞ்சம் மிஞ்சிடக்
        காலம் மாறின பருவமும்
மடமை விட்டிடக் கடமைகண்டினி
        மரம் வளர்ப்பது கருதுவோம்

நிழல் கொடுத்திடும் மரமனைத்தையும்
        விறகெரித்துள நிந்தையால்
தழல்புகுந்து நம் சமையல் செய்திடச்
        சாணி முற்றிலும் வெந்ததால்

தழையிலாமலும் எருவிலாமலும்
தகுதியற்றுள மண்ணிலே
விழல் முளைக்கவும் சாரமில்லை பின்
விளைவு எப்படி எண்ணலாம்?

வனமிருந்திடில் மழைபொழிந்திடும்
வானநீதியின் சத்தியம்
வனமழிந்தது மழைகுறைந்தது
வாய்மைகண்டனம் இத்தினம்
மனமுவந்தினி நாட்டிலெங்கணும்
மரமடர்ந்திடச் செய்குவோம்
தினமிருந்திடும் தானியக்குறை
தீர்ந்திடும்படி உய்குவோம்

பசுமரங்களில் தெய்வமுண்டெனப்
பழையமுன்னவர் போற்றினர்
இசைமிகுந்திட ஆயுள் நீண்டிட
இன்ப இல்லறம் ஆற்றினர்
வசையொழிந்திட நாமும் அப்படி
வனமரங்களை எண்ணுவோம்
திசையனைத்திலும் புகழ் சிறந்திடத்
தீர வாழ்க்கையும் பண்ணுவோம்

வாழ்க இத்திரு வாரம் முழுவதும்
மரம்வளர்த்திட நட்டவர்
வாழ்க அம்மரம் வேர் வலுக்கிற
வரையில் நீர்தனம் விட்டவர்
வாழ்க நம்முடை நாட்டிலெங்கணும்
வானளாவிடும் சோலைகள்
வாழ்க சத்திய சாந்த நல்வழி
வந்த இந்த சுதந்திரம்

# பொங்கல்

முத்தமிழ்ப் பண்பெனும் முதுபெருங் கற்கள்
மூன்றையும் அடுப்பென முன்றிலில்கூட்டி
அத்தமிழ் விளைத்துள அறம், பொருள், இன்பம்
அடங்கிய பானையை அடுப்பினில் ஏற்றி
மெய்த்தவநெறியெனும் நெருப்பினைப் பொருத்தி
மேவிய துயர்களை விறகென எரித்து
சத்திய சாந்தநற் பொங்கலைச் சமைத்து
சன்னதி ஆண்டவன் முன் அதைப் படைத்து

தீமைகள் யாவையும் தீர்ந்திட நாட்டில்
திங்கள்மும் மாரிக்குத் திருவருள் கூட்ட
வாய்மையும் தூய்மையும் வளர்ந்திடும் படிக்கோர்
வரந்தர வேண்டுமென் றிறைஞ்சிடுவோமே ;
நோய்மையும் பஞ்சமும் நொடியினில் விலகும்
நுண்ணிய நலந்தரும் புண்ணியம் பெருகும்
தாய்மையின் அன்புடன் தழைத்திடும் தருமம்
தமிழ்ப் பெரும் பொங்கலில் தாரணி மகிழும்.

# பொங்கல் வாழ்த்து

" மனிதர் யாவரும் ஒரு ஜாதி
மானிலம் எங்கணும் ஒரு நீதி
இனியதிவ் வெண்ணம் செழித்திடவே
இம்சையும் பொய்யும் ஒழித்திடவே
தனிவழி அறமுறை தமிழேபோல்
தளர்விலன் சத்திய அமுதூட்டும்
புனிதன் அக் காந்தியின் பொய்யறியாப்
பொக்கைச் சிரிப்புகள் பொங்குதல்போல்
பொங்குக! பொங்கல்! பொங்குகவே !!
புதிதொரு சுவைதரப் பொங்குகவே "

# பொங்குக புது வளம்

பொங்குக பொங்கல் பொங்குகவே
பொங்குக புதுவளம் பொங்கிடவே
திங்களில் மும்முறை மழைபொழிய
தினம்இது முதல்நம் குறைஒழிய
மங்குக போர்வெறி மாச்சரியம்
மதவெறி நிறவெறித் தீச்செயல்கள்
தங்குக சத்திய சன்மார்க்கம்
தரணியில் மாந்தர்கள் எல்லார்க்கும்

மானில உயிர்கள் நலமுறவும்
மக்கள் உடல்வளம் பலமுறவும்
ஞானமும் கல்வியும் சிறந்திடவும்
நல்லன உணர்ச்சிகள் நிறைந்திடவும்
தானியக் கதிர்வளம் உயர்ந்திடவே
தக்கன உழவுகள் முயன்றிடுவோம்
போனது உணவுப் பஞ்சமெனப்
புதுவளம் எங்கணும் மிஞ்சிடவே

இயற்கையின் வளம்பல இருந்தாலும்
இன்பம் யாவையும் பொருந்தாது
செயற்கைப் பொருள்கள் சேராமல்
சிறப்புள வாழ்வெனும் பேராமோ
வியக்கும் பொருள்களைச் செய்திடுவோம்
வேண்டிய திறமைகள் எய்திடுவோம்
நயக்கும் தொழில்பல பெருகவென
நமக்கதில் ஊக்கம் வருகவென

உழவும் தொழிலும் மலிந்துவிடில்
ஊரில் செல்வம் பொலிந்துவிடும்
விழவும் தினந்தினம் விருந்துகளும்
வீட்டிலும் நாட்டிலும் இருந்துவரும்

பழகும் அன்னிய நாடுகளும்
பரிவுடன் எதையும் ஈடுதரும்
செழுமை பெற்றிடும் வாணிபங்கள்
சேமித் திடுவோம் நாணயங்கள்.

பொலிவுறச்செல்வம் சேர்ந்த உடன்
புதுப்புது உணர்ச்சிகள் ஊர்ந்து வரும்
இலக்கியவாழ்க்கையில் இச்சை தரும்
இன்பச் செயல்களை மெச்சவரும்
நலிதரும் ஆசையை ஓட்டுவதால்
நன்னெறி இன்பம் ஊட்டுவதாய்
கலைகள் யாவையும் திகழ்ந்திடவும்
கண்டவர் கேட்டவர் புகழ்ந்திடவும்.

கொள்ளை கொள்ளை தானியமும்
கோரும் பலதொழில் மானியமும்
வெள்ளி பொன் செல்வம் மிகுந்திடினும்
வேண்டிய கலைத்திறம் திகழ்ந்திடினும்
கள்ளமும் பொய்யும் அமிழ்ந்திடவும்
கருணை நறுமணம் கமழ்ந்திடவும்
உள்ளம் மலர்ந்திடல் இல்லாமல்
உண்மை வளமெதும் நில்லாது.

தனிநாயகன்ஒரு பரம் பொருளாம்
தரணியை ஆள்வது அவன் அருளாம்
மனநாயகம்இதில் மலர்ந்துவிடில்
மற்றுள வேற்றுமை உலர்ந்துவிடும்
ஜனநாயகமுறை ஓங்கிவிடும்
சச்சர வென்பன நீங்கிவிடும்
இனமாய் யாவரும் வாழ்ந்திடலாம்
இன்பப் புதுவளம் சூழ்ந்திடவே.

# தியாகபுத்தி

போகம்மிக்க இன்பவாழ்வை
புவியிலெங்கும் நாட்டலாம்
பொறுமைபோக்கும் வறுமைதன்னைப்
பூமிவிட்டு ஓட்டலாம்
சோகமுற்று வாடும்மக்கள்
சுகமடுக்கப் பண்ணலாம்
சூதுவாது பொய்கள்விட்டு
சுத்தமாக்க எண்ணலாம்
வேகமூட்டும் 'பகைமை' யென்னும்
வெறியைமுற்றும் போக்கலாம்
வேறுஜாதி சமயம்என்னும்
வெட்டிச்சண்டை நீக்கலாம்
'தியாகபுத்தி' ஒன்றைமட்டும்
சிறிதுநாமும் போற்றினல்
தெய்வலோகம் நாணஇந்த
வையகத்தை மாற்றலாம்

'அடிமை'யென்ற சொல்லுங்கூட
அவனிவிட்டு ஓடுமே
ஆணும்பெண்ணும் சமதையென்ற
அறிவுவந்து கூடுமே
கடமையென்று கருணைசெய்யும்
காலம்வந்து சேருமே
கட்சிகட்டும் பட்சமற்ற
காரியங்கள் மாறுமே

உடைமைசொத்து ஒன்றுமின்றி
உடல்சுகிக்க வாழலாம்
உலகிலெங்கும் கலகமின்றி
உரிமைகொள்ளச் சூழலாம்
கொடுமையற்ற ராஜரீகம்
குலவியாளக் காணலாம்
கொஞ்சமிந்தத் 'தியாகபுத்தி'
மட்டும்மக்கள் பேணினுல்.

# வடநாட்டில் கொடுமை

கோபமும் கொதிப்பும் குமிறிடும் படிபல
கொடுமைகள் நடக்குது வடநாட்டில்
தாபமும் தவிப்பும் தந்திடும் ஆயினும்
தமிழா ! உன்குணம் தவறிடுமோ ?

அன்னிய மதமென அடிக்கடி பழகிய
அயலுள மக்களைக் கொல்லுவதை
என்னென உரைப்பது ஏதென வெறுப்பது
எண்ணவுங் கூடத் தகுமோதான் ?

வேறொரு மதமென அண்டையில் வசிப்பவர்
வீட்டினைக் கொளுத்துதல் வீரமதோ ?
ஆறறி வுடையவர் மனிதர்கள் என்றிடும்
அழகிது தானோ ? ஐயையோ !

பிறிதொரு மதமெனப் பெண்மையைக் கெடுப்பதும்
பிள்ளையை மடிப்பதும் பேய்செயுமோ ?
வெறிதரும் நெறிகளை விலக்கிய உன்குணம்
விட்டிடப் படுமோ ? தமிழ்மகனே!

அங்குள வெறியர்கள் அப்படிச் செய்ததில்
அவசரப் படுத்திடும் ஆத்திரத்தால்
இங்குள சிலர்எதிர் செய்ய நினைப்பதை
எப்படித் தமிழ்மனம் ஒப்பிடுமோ ?

தீமையைத் தீமையால் தீர்க்க நினைப்பது
தீயினைத் தீயால் அவிப்பதுபோல்
வாய்மையின் தூய்மையின் வழிவரும் தமிழா !
வஞ்சம் தீர்ப்பதை வரிப்பாயோ ?

அடைக்கலம் புகுந்தன அன்னிய மதம்பல
அன்புள நம்தமிழ்த் திருநாட்டில்
கொடைக்குணம் மிகுந்தநம் குலத்தவர் காத்தனர்
கொள்கையை நாம்விடக் கூடாது.

வேற்றுமை பலவிலும் ஒற்றுமை கண்டிடும்
வித்தையிற் சிறந்தது தமிழ்நாடு
மாற்ருெரு மதத்தையும் போற்றிடும் பெருங்குணம்
மதமெனக் கொண்டவர் தமிழர்களே.

எம்மதம் ஆயினும் சம்மதம் என்பதை
ஏந்தி நடப்பது தமிழ்நாடு.
அம்மன உணர்ச்சியை அறமெனக் காப்பதில்
அசைந்திட லாமோ தமிழறிவு ?

மதமெனும் பெயரால் மக்களை வதைப்பதை
மாநிலம் இன்னமும் சகித்திடுமோ ?
விதவிதம் பொய்சொலி வெறுப்பினை வளர்த்திடும்
வெறியரைத் தமிழர்கள் முறியடிப்போம்.

நவகாளி அட்டூழியம் கேட்டுப் பாடியது.

# பூஞ்சோலை

மான்சேர மயிலாடக் குயில்பாட மலர்கள்
தேன்சேர மகரந்தம் திசைதோறும் சிதற
மீன்சேரும் சிற்றோடை மெல்லோசை தவழும்
பூஞ்சோலை அதிலுற்றுப் புளகித்து மகிழ்வோம்.

பலகற்றும் அறிவென்ற பயனற்று நித்தம்
கலகத்தை விளைவித்துக் கவலைக்குள் கத்தும்
உலகத்தை ஒருசற்று பொழுதேனும் விட்டு
விலகுற்று அமைதிக்கு வெகுநல்ல இடமே.

அன்பொத்த சுகமூட்டும் அதிலுள்ள பசுமை;
இன்பத்தின் களிகூட்டும் பலபட்சி இசைகள்;
தெம்புற்ற அறிவொக்கும் தெளிவான தண்ணீர்;
துன்பத்தை மறைவிக்கத் துணையாகும் என்னே;

கோபங்கள் மிதமிஞ்சிக் கொதிகொண்டு வெந்து
பாபங்கள் புரிகின்ற பழுதுற்று நொந்து
தாபங்கள் வெகுவாகத் தணிவுற்று அறிவும்
சோபிக்க இடமிந்தப் பூஞ்சோலை செறிவும்.

மண்ஒன்று, நீர்ஒன்று, மழையென்ப தொன்றே
பண்ணைக்கு செய்நேர்த்தி பாட்டாளி ஒன்றே
எண்ணற்ற நிறபேதம் எதிலுற்ற தென்றே
கண்ணுற்ற பூஞ்சோலை கதைசொல்ல நின்றேன்.

யார்செய்வ திதுவென்று அதிவிந்தை எய்தி
போர்செய்த பலஎண்ணம் புந்திக்குள் செய்து
நேர்செய்த அறிவுற்று நினைவுற்ற பொழுதே
ஓர்தெய்வம் உளதென்று உணர்வுற்றுத்தொழுதேன்.

# மக்களின் அணிகலம்

அறிவே மக்களின் அணிகலமாம்
அன்பே அதில்ஒளிர் மணியெனலாம்
குறிவே றெதையும் கொள்ளாதே
குணமிகும் இவ்வுரை தள்ளாதே

உண்மையை நாடுதல் அறிவாகும்
உயிர்களுக் கன்பே நெறியாகும்
புண்ணியம் என்கிற பணிகளையே
பூண்பது வேநல் அணிகலமாம்.

அன்பெனும் அணிகலம் ஒளிவீசும்
ஆதர வாகிய மொழிபேசும்
புன்சிரிப்பங்கே பொங்கிவரும்
பூரிப் பங்கே தங்கிடுமே.

அறிவெனும் அணிகலம் அழகிஞெடும்
அச்சமற் றெங்கணும் பழகிவிடும்
பறிமுதல் செய்திட முடியாது
பகைவர் என்பதும் கிடையாது.

கல்வியும் கேள்வியும் பொன்னுகும்
கருணையின் மெருகே மின்னுகும்
நல்லின நட்புகள் நவமணிகள்
நகைமுக அணிகலம் தவமெனலாம்.

பூண்டவர் தமக்கொரு தெம்புதரும்
புறத்துள எவர்க்கும் இன்புதரும்
ஆண்டவன் நினைவொடு பணிபுரியும்
அன்புடை அறிவே அணிகலமாம்.

# கதிரொளி

கதிரொளி வந்தது
களிப்பினைத் தந்தது
மதிதெளி வுற்றது
மயக்கமும் அற்றது
புதியன பலப் பல
உணர்வுகள் புலப்பட
அதிசயம் மிக்கென
அறிவுகள் புக்கன

காலையின் அழகுகள்
கதிரொளி வரவால்
மாலையின் மயக்கமும்
கதிரொளி மறைவால்
சோலையின் பசுமையும்
கதிரொளி வசமே
லீலைகள் எண்ணில
கதிரொளி நிசமே

உடல்நல முறுவது
கதிரொளி உறவால்
கடல் ஜலம் மழைதரல்
கதிரொளித் திறமே
செடிகொடி மலர்எழில்
கதிரொளிச் செயலே
கடவுளை உலகினில்
காட்டுவ ததுவே

ஏழையும் செல்வனும்
இருவரும் சமமே
கோழையும் கொடியரும்
கூடத்தன் தமராய்
ஆழியை நடத்திடும்
கதிரொளி அரசன்
வாழிய வாழ்த்தி நல்
வாழ்வுகள் பெறுவோம்.

# அன்பு

அன்பு என்ற ஒன்றை நாம்
அறிந்துகொள்ளக் கூடுமேல்
துன்பம் என்ற யாவையும்
தூரமாக ஓடுமே
வம்பு வாது வார்த்தை முற்றும்
வாயடங்கிப் போகுமே
இன்பமாக நாமெலாம்
இங்கிருந்து வாழலாம்

ஜாதி பேதச் சண்டையும்
சமய பேதக் கொடுமையும்
மோதிமோதி மக்கள்தம்மை
மூடராக்கும் மடமையும்
நாதியற்றுப் போகுமிந்த
நானிலத்தின் மீதிலே
ஆதிநாள் நம் அன்னைசெய்த
அன்பை எண்ணும் போதிலே

அன்பு கொண்ட பேர்களுக்கு
அச்சமில்லை எங்கணும்
முன்பு என்றும் கண்டிராத
மூர்க்கரோடும் தங்கலாம்
துன்பமுற்ற மக்கள் யாரும்
துணைவரென்று போற்றவே
செம்பு கொண்ட தங்கமென்ன
சேர்ந்த தீமை மாற்றுவார்

வெல்லவந்த சேனைகூட
 வேகமற்ற தாகுமே
கொல்லும் வேலும் வாளுங்கூடக்
 கூர்மழுங்கிப் போகுமே
கல்லும்கூடப் புல்லைப்போலக்
 கனிவுகொண்டு காணுமே
சொல்லுமிந்த அன்பைமட்டும்
 சுத்தமாகப் பேணினுல்

சூழுமின்றிக் குடிசையின்றிக்
 கோடி கோடி உலகினில்
ஏழைமக்கள் பரதவித்து
 ஏங்கநேரும் கலகமும்
கோழைப்பட்ட செல்வம் செய்யும்
 கொடுமை முற்றும் குறையுமே
வாழிஇந்த அன்புமட்டும்
 வையமெங்கும் நிறையுமே

பஞ்சமென்ற ஏக்கமும்
 பகைமையென்ற கொச்சையும்
நஞ்சையொத்த கோபமும்
 நாசமூட்டும் இச்சையும்
கெஞ்சிநின்று சோறுதின்னும்
 கீழ்மையான எண்ணமும்
அஞ்சிஅஞ்சி அன்பினுக்கு
 அடிமை வேலை பண்ணுமே

முக்திஎன்ற ஆசையும்
 மோட்ச மென்று பேசலும்
பக்தி என்ற பாசமும்
 பரமன் என்ற நேசமும்

சத்தியத்தின் மேன்மையும்
சாந்தி என்ற வெற்றியும்
அத்தனைக்கும் மூலமாம்
அன்பு என்ற ஒன்றுதான்

போழ்ந்து நம்மை நீக்கிவைக்கும்
பேதபுத்தி போகவும்
சூழ்ந்துநின்று மதிகெடுக்கும்
சூது பொய்கள் ஏகவும்
ஆழ்ந்த கல்வி யின்றிக்கூட
அன்பு என்ற ஒன்றினுல்
வாழ்ந்திருக்க லாகும் அன்பு
வளர்க, வாழ்க என்றுமே

நேயமற்ற மதவெறிக்கு
நிலையமான தேசமாம்
பேயுங்கூட நடுநடுங்கிப்
பேதலித்துக் கூசுமாம்
நாய்நரிக்கும் அச்சமூட்டும்
நவகளிக்குள் காந்தியார்
போய்நடந்த யாத்திரைக்குள்
புனித அன்பு சேர்ந்ததாம்

தெய்வமென்று உலகம் நித்தம்
தேடுகின்ற ஒன்றுதான்
வையகத்தில் அன்பு என்ற
வார்த்தையாகி நின்றதே
ஐயன் எங்கள் காந்தி வாழ்வின்
அற்புதத்தை நாடியே
மெய்யுணர்ந்து அன்பு சொல்லும்
மேன்மை யாவும் கூடுவோம்

# புத்தாண்டுச் சபதம்

நாகரீக மென்று சொல்லி
எந்திரத்தை நம்பியே
வேகமாக யுத்தமென்ற
குழியில் வீழ்ந்து வெம்பினுர்
போக வாழ்வை எண்ணி எண்ணிப்
போட்டியிட்டு முண்டியே
சோகமுற்று உலகமெங்கும்
வறுமைமிஞ்சத் தண்டினேம்

உண்டுடுத்துக் குடிவெறித்து
உலகை ஆளும் ஆசையே
கண்டுவிட்ட இன்பமாகக்
காலமுற்றும் பேசியே
சண்டையிட்டுக் கொன்றுவீழ்த்தச்
சக்திதேடும் ஒன்றையே
கொண்டுவிட்ட கொள்கையாக்கிக்
கொடுமைசூழ நின்றுளோம்

ஒருவர்நாட்டை ஒருவர்பற்றி
உரிமைபேசி ஆள்வதும்
இருவர்மூவர் சேர்ந்துகொண்டு
இம்சைகாட்டி வாழ்வதும்
பெருமைஎன்று எண்ணிவந்த
பித்துக்கொண்ட கொள்கையால்
தருமமற்று மனிதவர்க்கம்
தலைகுனிந்து வெள்கிறேம்

எந்த வேளை என்னவென்று
ஏதுசண்டை கூடுமோ
எந்த நாட்டில் எந்தத்தேசம்
எந்தக்குண்டைப் போடுமோ
வந்ததீமை தப்பிவாழ
வழியைத் தேடி மானிலம்
சிந்தைநொந்து மனிதவாழ்வு
சீர்குலைந்து போனதே

உலகில் உள்ள மக்கள் யாரும்
ஒரு குடும்பமாகவே
கலகமற்று யுத்தமென்ற
கவலைவிட்டுப் போகவே
குலவிவாழ இந்தநாட்டின்
கொள்கையாகும் சாந்தியே
சுலபமான மார்க்கமென்று
சுத்தமாக ஏந்துவோம்

உயிரிருக்கும் உடலனைத்தும்
ஈசன்வாழும் உறையுளாம்
அயர்விலாத ஞானமூட்டும்
அருளறிந்த அறிவுளோம்
பெயர்படைத்த நமதுநாட்டின்
பெருமையாகும் மந்திரம்
துயரறுக்கும் ‘ சாந்தி ’ சொல்லித்
தொண்டுசெய்ய முந்துவோம்

# நோயற்ற வாழ்வு

உலகினிற் சிறந்ததென்றும்
        உருவினிற் பரந்ததென்றும்
உயர்தவ யோகசித்தர்
        ஒப்பிலார் இருந்ததென்றும்
பலவளம் நிறைந்ததென்றும்
        பகுத்தறி வுயர்ந்ததென்றும்
படித்தனம் கேட்டோமந்தப்
        பாரத தேசமக்கள்
புலபுல வென்றுநித்தம்
        புதுப்புது நோய்களாலே
புழுக்கள்போல் விழுந்து மாண்டு
        போவதைக் கண்டுமையோ
விலகிட வழிதேடாமல்
        விலங்கினம் போலவாழ்ந்து
விதியென வாதம்பேசி
        வீணரா யிருத்தல் நன்றோ

கற்பமும் அறிந்துகாய
        சித்தியும் கற்கமேலோர்
பற்பலர் இருந்தயிந்தப்
        பாரத தேசமக்கள்
அற்பமாய் ஆயுள்குன்றி
        அழிந்திடல் ஏனோவென்று
சொற்பனந் தன்னிற்கூட
        எண்ணிடத் துணிந்தோமில்லை

உடல்வலி மிகுந்துநல்ல
ஊக்கமும் உறுதிபொங்க
உலகினில் இன்பமெல்லாம்
உயர்வழி அனுபவித்த
திடமுள தீரவீரர்
திகழ்ந்தஇச் சிறந்தநாட்டில்
சிறியதோர் நோய்வந்தாலும்
தாங்கிடத் திறனில்லாமல்
நடைபிணம் போலநாமும்
நாள்கழித் திருந்தோமையோ
நாடிலோம் இதனைமாற்ற
நல்வழி யென்னவென்று
மடமையோ மதியோ அன்று
விதியெனும் மயக்கந்தானே
மாற்றநாம் அல்லதென்றால்
மதியினாற் பயன்தானென்னே
முற்றிய ஒழுக்கத்தாலும்
முறைதெரி வாழ்க்கையாலும்
பெற்றவர் காணமுன்னுள்
பிள்ளைகள் இறந்ததில்லை
கற்றவர் பெரியோர் நித்தம்
கதைகளிற் சொல்லக்கேட்டோம்
இற்றைநாள் கோடி கோடி
பிறக்குமுன் இறப்பதேனோ
மணத்தையே விரும்பியோடி
மலரினைக் கசக்குவார்போல்
பணத்தையே பெரிதென்றெண்ணிச்
சுகத்தினைப் பழித்து வாழ்ந்து

குணத்தையே விலக்குவிற்றுக்
குரங்கினைக் கொண்டார்போல
இனத்தையே பிணிகள்வாட்ட
இருந்தனம் அறிவிருந்தும்
உண்டியில் ஆசைவைத்தோம்
ஒழுக்கமே மறந்துபோனோம்
பெண்டினர் மக்கள் தம்மை
வளர்த்திடும் முறைமைபேணர்
மண்டையி லெழுத்திதென்று
மயங்கினோம் கர்மந்தன்னை
மண்டின நோய்கள் க்ஷாமம்
மலிந்திட நலிந்தோமையோ
பிணியிலே பிறந்துநித்தம்
பிணியையே அருந்திப்பொல்லாப்
பிணியிலே வளர்ந்து அந்தப்
பிணியினுற் சாகக்கண்டும்
அணியிலே ஆடையாலே
அலங்கரித் தோமேயன்றி
அறிவிலே ஆசாரத்தால்
அழகெதும் செய்தோமில்லை
பணியிலும் பணத்திலேயும்
சுகமெலாம் இருந்தாற்போலப்
பழகினோம் நாமேயன்றிப்
பழக்கினோம் மக்கள் தம்மை
துணிவிலோம் தூய்மையில்லோம்
சுசிகர நடத்தையில்லோம்
துவக்குவோம் இனிமேலேனும்
நோய்களைத் துடைக்கும் வாழ்க்கை

# வருவாய் முருகா

வாவா முருகா! வடிவேல் முருகா!
காவாய் முருகா! கடிதே முருகா!
தேவா உனையே தினமும் தொழுவேன்
தீவாய் பிணிவைத் தீரித்தினமே

அழியா அழகா! அறிவாம் முருகா!
கழியா இளமைக் கடலே முருகா!
மொழியா இன்பம் அடையும் முறையை
ஒளியா தருள்வாய் ஒருவா முருகா!

குறையா அழகே! குமரா முருகா!
மறையா வையமே அறியா ஒருவா!
சிறைவா யுலகில் சிறுகும் எளியேன்
சிறுகா விதமுன் திறமே தருவாய்!

தளரா உடலும் சலியா உயிரும்
குளறு உரையும் குறையா அறிவும்
வளரா வாடா வடிவம் உடையாய்!
எளியாய்! அடியார் களியே! ஒளியே!

நரையும் திரையும் நணுகா முருகா!
கரையும் பிணியும் களையொன் றறியாய்
விரியும் உலகின் விரையே முருகா!
வருவாய் முருகா வரமே தருவாய்!

# தமிழைப் பேணுவோம்

பாஷைக ளெல்லாம் பசையற நாணிக்
கூசிக் கூசிக் குறைபடச் செய்யும்
வாசத் தமிழை வரையிலாத் தொன்மையை
வீசும் தமிழை விரிந்த கடலினைத்
தேனினும் பாகினும் தெள்ளிய அமுதினும்
ஏனினும் எதனினும் இனித்திடும் தமிழை
தின்னத் தின்னத் தெவிட்டாத் தமிழை
பன்னப் பன்னப் பலக்கும் தமிழை
கொள்ளக் கொள்ளக் குறையாத் தமிழை
கள்ளக் கபடுகள் இல்லாத் தமிழை
படிக்கப் படிக்கப் பயனே தந்து
குடிக்கக் குடிக்கக் குறையா அமுதை
என்தாய் மொழியினை என்னுடைத் தமிழை
உன்தாய் மொழியினை உம்முடைத் தமிழை
எம்மையும் உம்மையும் மற்றுமிங் கெவரையும்
செம்மையாய் நம்முடைச் சிறுபிரா யத்தினில்
தொட்டிலில் விட்டுக் கட்டிலில் வைத்துத்
தோளிலும் மார்பிலும் தூக்கித் திரிந்து
பாலூட்டி வளர்த்த பாவையாம் தமிழை
தாலாட்டி வளர்த்த தாயாம் தமிழை
சீராட்டி வளர்த்த சீர்பெறும் தமிழை
பாராட்டி வளர்த்த பழையதோர் தமிழை
கோவண முடுத்துப் பாவாடை தந்த
தேவியாம் தமிழை தெய்வ நற்றமிழை
ஆசையாம் மனைவியை அகத்தினில் விட்டு
வேசையை விரும்பும் வெறியரைப் போன்ற

பாஷையை மறந்த பாதகர் பிறந்து
தேசமிந் நாட்டின் தீவினை யாலே
சீச்சீத் தமிழெனச் சீறிப் பழித்து
நாசியை நீட்டி நாய்போல் விழுந்து
ஏசித் திரியும் இழிவுடை மாக்கள்
பேசவும் கூசிடும் பேயர்கள் பிறந்து
தன்னை வளர்த்த தமிழைப் பேசுதல்
குன்னுந் தொழிலெனக் கூசியே நின்று
பன்னப் பன்னப் பல்லைக் காட்டிடும்
சின்னஞ் சிறியவர் பிறந்தத னாலே
தாயை மறந்த தடியர்கள் போல
வாயைத் திறந்தொரு வார்த்தை சொல்லவும்
உரிமையாம் பாஷையைத் தெரியா திருப்பது
பெருமையென் றெண்ணும் பேயெனு மாக்கள்
குங்குமம் சுமந்த கழுதையே போலத்
தம்முடைப் பாஷையைத் தாமுண ராமல்
அத்துடன் அதனை அவமதித் தேசும்
பித்தரும் பதரெனும் சுத்தநிர் மூடர்கள்
பிறந்தத னாலே பெருமை மறந்து
சிறந்த நாளும் சீரும் குறைந்து
மண்ணிற் கிடக்கும் மணியே போலும்
எண்ணெயிற் றோய்த்த எழுத்தே போலும்
அற்பரை அண்டிய விற்பனர் போலும்
ஆதர வில்லா வித்தையே போலும்
அணைப்பவ ரில்லாக் குழந்தையே போலும்
அநுபவ மில்லா அறிவே போலும்
மங்கிக் கிடக்கும் மருவிலாத் தமிழை
இங்கிதத் தமிழை இனிமையாம் தமிழை

அந்த நாளினிற் சந்திர முடியோன்
சுந்தரப் படுத்த வந்துநின் றருளி
விருத்தியே செய்யக் கருத்தினி லெண்ணி
பெருத்த கேள்வியர் பெரியவர் சபையென
சங்கரன் தானே அங்கத் தலைவனாய்
தங்கியே நடத்திய தனிப்பெரும் சபையென
சுத்தரும் சித்தரும் பக்தரும் துதிக்க
இத்தரை யெல்லாம் இசைகொண்டு நின்று
உலகெலாம் அழியினும் விலகிடாப் புகழொடு
அலகிலாக் கல்விக் களஞ்சிய மாகி
தெய்வப் பலகையைத் தன்னிட மடக்கி
ஐயமில் லாத அருந்தமி ழளித்த
சித்திரச் சபையாம் மெய்த்திருச் சபையாம்
முத்தமிழ்ச் சங்கம் விளங்கிய தமிழை—
தாயெனப் பேணித் தமிழர்கள் யாவரும்
ஓயா துழைத்து ஒப்பிலா மொழியெனப்
புதுப்புதுக் கவியும் புகழ்பெறு நூல்களும்
விதவிதம் படைத்து வேறுள நாட்டவர்
யாவரும் வியக்க அரியா சனத்தில்
மேவிடச் செய்ய விரைகுவம் இன்றே.

# இறை வணக்கம்

அன்பினுக் கன்பாய்வந்து
அறிவினுக் கறிவாய்நின்று
அறிந்தவர்க் கெளியனாகி
அல்லவர்க் கரியனாகி
முன்பினும் நடுவொன்றின்றி
முதுமறை தனக்குமெட்டான்
மூடர்கள் மனத்திற்கூட
மூலையி லொதுங்கிநின்று
செம்பினும் கல்லினாலும்
செய்தவை எல்லாமாகிச்
சிலந்திபோற் கூடுகட்டிச்
சிலுவையில் மறைந்தான்போல
என்பினுக் கென்பாயென்றும்
எம்முளே விளங்குகின்ற
எழுஞ்சுடர் ஜோதியான
இறைவனை இறைஞ்சிநிற்பாம்.

# வாழி

வாழ்க வாழ்க உலகெலாம்
வாழ்க எங்கள் தேசமும்
வாழ்க எங்கள் தமிழகம்
வாழ்க எங்கள் மனையறம்
வாழ்கமேழிச் செல்வமே
வளர்க நாட்டுக் கைத்தொழில்
வாழ்க எங்கள் வாணிபம்
வாழ்க நல்ல அரசியல்
அன்புகொண்டு யாவரும்
அச்சமின்றி வாழ்கவே
துன்பமான அடிமையின்
துக்கம் யாவும் நீங்கியே
இன்பமான யாவுமெய்தி
இந்நாட்டில் எங்கணும்
தெம்பினோடு தெளிவுபெற்றுத்
தேவர்போற்ற வாழ்கவே.

UNIVERSITY EXTENSION LIBRARY MADURAI 16 DEC 1957
632
O31;1M88
J61
UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI
UNIVERSITY LIBRARY 31 MAY 1957